# CIRRU MANI TTHIRAL:

## A NEW TAMIL POETICAL ANTHOLOGY.

# சிறுமணித்திரள்.

BY

MOSUR VENKATA SWAMI AIYER.

PUBLISHED BY

C. COOMARASAWMI NAIDU & SO[NS]

3 Esplanade Row, Madras.

1904.

All Rights Reserved.

Price, Annas 2½.

# அறிவிப்பு.

சில வருடங்களிற்கு முன்னர்த் தமிழ்நாடுகள் எங்கும் வழங்கிய முதற் நீதிமஞ்சரி, இரண்டாம் நீதிமஞ்சரி என்னும் இரண்டு சிறுநூல்களும் இக் காலத்திற் கிடையாதனவாகிப் போயினவன்றோ? அவற்றிலிருந்தெடுத்த சில பாக்களும், வேறு நூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்த பல பாக்களும், மெஸர்ஸ் மாக்மில்லன் கம்பெனியார், கிறிஸ்டியன் லிட்ரேசர் சோஸைட்டியார் முதலான புத்தக வியாபாரிகளால் அச்சிடப்பட்ட பல வாசக புஸ்தகங்களி லும், சிறிது சிறிது கூட்டப்பட்டிருக்கின்றன. மாணாக்கர்கள் மேல்வகுப் பிற்குப் போகும்போது, இவ்வாசக புஸ்தகங்களைப் பலவகையாற் போக்கி விடுவதினால், கீழ்வகுப்புக்களில் மனப்பாடஞ் செய்த பாக்களை மறுபடி யும் படிக்க விரும்புங்கால், நூல் கிடையாது வருந்துகின்றனர். மாணாக்கர்கள் இலக்கிய இலக்கணங்களிற் பெற்ற சிறிது பயிற்சியையும் இழக்காதபடி காலமுழுதும் உபாத்தியாயர்களும், தந்தைதாயரும், லோயர் செகண்டரி பரீட்சைக்குப் போகுமளவும் படிக்கக்கூடிய பாக்களும், தோஷமற்ற நீதி புகன்ற வேறு பல பாக்களும் கொண்ட சிறுவிலை நூல் ஒன்றில்லாக்குறை கண்டு கலங்குகின்றவண்ணமே, யானும் பன்முறை வருந்தினேனாதலால், **சிறுமணித்திரள்** என்னும் இச்சிறுநூலைத் திரட்டி யச்சிடுவிக்கத் துணிந்தனன்.

இதனில்,

1. வாக்குண்டாம்.
2. நல்வழி.
3. நன்னெறி.
4. இனியவை நாற்பது.
5. இன்னா நாற்பது.
6. நீதிவெண்பா.
7. நீதிநெறி விளக்கம்.
8. பழமொழி.
9. அறநெறிச்சாரம்.
10. திரிகடுகம்.
11. நான்மணிக்கடிகை.
12. சிறுபஞ்சமூலம்.
13. ஏலாதி.
14. பட்டணத்துப்பிள்ளை பாடல்.
15. சகலகலாவல்லி மாலை.
16. உத்தரநீதி.
17. சூடாமணி நிகண்டு.

என்னும் பதினேழு நூல்களினின்றுந் தெரிந்தெடுத்த 500 பாக்களுள.

இச்சிறுமணித்திரள், எவருடைய வாசகங்களை யுபயோகிப்போருக்குஞ் சாலப் பயன்படுமாறு எட்டு அட்டவணைகளுங் கூட்டப்பட்டன.

# CIRRU MANI TTHIRAL,

## A NEW TAMIL POETICAL ANTHOLOGY.

# சிறுமணித்திரள்.

93, MOORE S...
MADRAS-3

BY

**MOSUR VENKATA SWAMI AIYER.**

*Head Tamil Pundit, U. F. C. M. B. H. School, Royapuram;*
*Formerly Munshi to the Free Church Mission, Madras:*
*Head Tamil Pundit, Doveton College, and St. Mary's College, Madras;*
*Author of "A Help to the thorough understanding of the Tamil Poetical Anthology, Nos. I and II;" and of the "Tamil Grammars" published by Messrs. Macmillan and Co.;*
*Author of "A Perfect Help to Cirru Mani Tthiral."*

PUBLISHED BY

**C. COOMARASAWMI NAIDU & SONS,**

**Esplanade Row, Madras.**

1904.

*All Rights Reserved.*

*Price, Annas 2½.*] [விலை, அணா ௨½.

T
894.811 C 82


PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS.

1904.

SHELF LISTED
NATIONAL LIBRARY
No.
Date 22-9-57
CALCUTTA

# PREFACE.

THE Compiler begs to write a few lines by way of Preface and apology for the introduction of this little book. It is well known to those engaged in the Educational Department either as Teachers or as Inspectors of Upper Primary and Lower Secondary schools, that the old Tamil Anthology Books Nos. I and II so widely used alongside of the Prose Readers of Government School Book Society, in the Tamil Districts a few years ago, have now entirely disappeared, and Readers containing Prose and Poetry portions with and without Notes for the stanzas, have taken their place.

A remembrance of the stanzas the pupils learn in their early days,—stanzas selected from old authors, and admitted to be of an easy, interesting and instructive type,—will create in them a lively interest in Tamil literature in later years. The retention in memory of these stanzas, depends chiefly on refreshing the memory with a sight of them. But, unfortunately, often when the pupil takes leave of his old class and goes to the *higher form*, he bids farewell to his old Tamil readers as well; and the readers, too, in many cases get borrowed or lost.

This NEW ANTHOLOGY which is a selection from

| | |
|---|---|
| (1) Vakkundam. | (10) Tri Katukam. |
| (2) Nalvazhi. | (11) Nanmanik Kadihai. |
| (3) Nannerri | (12) Cirru Pancha Moolam. |
| (4) Eneya Narppathu. | (13) Yelathi. |
| (5) Inna Narppathu. | (14) PattanathuppillaiPadal |
| (6) Neethi Venba. | (15) Sakalakalavalli Malai. |
| (7) Neethi Nerri Velakkam. | (16) Utthama Neethi. |
| (8) Pazha Mozhi. | and |
| (9) Arranerri Charam. | (17) Choodamani Nikandu |

is intended to give the readers a collective idea of all that he may have read in the various classes.

## PREFACE.

Any word or phrase that ought not to find its way to the young pupil's mind has been carefully altered to harmonise with the required moral standard. A manual of this kind will obviously render unnecessary a reference to the readers now in use, as far as the poetry portion is concerned, as in the majority of cases they comprise selections only from the above authors. A collection of about 500 stanzas is presented in this book in a handy and cheap form.

All Tamil scholars, and those with a real taste for Tamil, will admit that a good acquaintance with "**Nikhandu**" is indispensable for a sound knowledge of the language, and about a hundred stanzas from that book, dealing with the names of things most commonly employed in ordinary prose or poetry, have been selected and put in so that a study of them in the lower forms will be of immense help to the pupil in his High School and College classes. The practice of giving synonyms for difficult words under each stanza, has not been followed, as it is not always unalloyed good. The stanzas entitled "**Uthamaneethi**" are a selection of Sanskrit verses rendered into Tamil by the Compiler. Separate lists of the stanzas found in the Fourth, Fifth, Sixth and Seventh Readers of Messrs. Macmillan & Co. are added to enable the students to make them for his course of study.

M. VENKATA SWAMI AIYER.

ROYAPURAM,<br>*28th Dec., 1904.*

# விஷய சூசிகை.

## நூல்கள்.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | வாக்குண்டாம் | 1 |
| 2. | நல்வழி | 6 |
| 3. | நன்னெறி | 12 |
| 4. | இனிய நாற்பது | 18 |
| 5. | இன்னா நாற்பது | 22 |
| 6. | நீதிவெண்பா | 24 |
| 7. | நீதிநெறிவிளக்கம் | 27 |
| 8. | பழமொழி | 34 |
| 9. | அறநெறிச்சாரம் | 38 |
| 10. | திரிகடுகம் | 42 |
| 11. | நான்மணிக்கடிகை | 45 |
| 12. | சிறுபஞ்சமூலம் | 49 |
| 13. | ஏலாதி | 52 |
| 14. | பட்டணத்துப்பிள்ளைபாடல் | 54 |
| 15. | சகலகலாவல்லி மாலை | 56 |
| 16. | உத்தமநீதி | 58 |
| 17. | சூடாமணி நிகண்டு | 60 |

மாக்மில்லன் கம்பெனியாருடைய

## நான்காம் வாசக புத்தகத்தில்

கூட்டியுள்ள செய்யுட்பாடச் செய்யுட்கள்.

### I. ஔவையார் அருளிச்செய்த

# நல்வழி

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 1. சாதி யிரண் ... ... | 6 | 6. பாடுபட்டுத் ... ... | 9 |
| 2. ஆற்றப் பெருந் ... | 7 | 7. ஆன முதல் ... ... | ,, |
| 3. ஒருநா ளுணவை ... | ,, | 8. ஒன்றை நினைக்கி ... | 10 |
| 4. கண்ணீர் நிலநனைத் ... | 8 | 9. மரம்பழுத்தால் ... | ,, |
| 5. நீரு நிழலு ... ... | 9 | 10. கல்லானே யானு ... | 11 |


### II. சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த

# நன்னெறி

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 11. என்று முகம ... ... | 12 | 19. இன்சொலா ... ... | 14 |
| 12. பிறர்க்குதவி ... ... | ,, | 20. பெரியவர்தந் நோய் ... | 15 |
| 13. நீக்க மறுமிரு ... ... | ,, | 21. உண்டு குணமிங் ... | ,, |
| 14. கடலே யனை ... ... | 13 | 22. கைம்மா றுகவா ... | 16 |
| 15. உள்ளங் கவர்ந் ... | ,, | 23. முனிவினு நல் ... ... | ,, |
| 16. தங்குறைதீர் ... ... | ,, | 24. கொன்னுங்கொடுங் ... | ,, |
| 17. வருந்து முயி ... ... | ,, | 25. நல்லார் செயுங் ... ... | 17 |
| 18. எங்கைதகல் கூர்ந் ... | 14 | 26. பொன்னணியும் ... | ,, |

# III. நீதிவெண்பா.


| பாட்டுக்களின் அடிகள். | | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|
| 27. தாமரை பொன் | ... | 24 |
| 28. மென்மதுர வாக் | ... | ,, |
| 29. பகைசேரு மெண் | ... | ,, |
| 30. கொய்தாங் கிரண | ... | 25 |
| 31. ஆசைக் கடியா ... | ... | ,, |
| 32. ஈக்கு விடங் ... | ... | ,, |
| 33. கர்ப்பூரம் போலக் | ... | ,, |
| 34. சிற்றுணர்வோ ... | ... | ,, |
| 35. இன்னா தரும் ... | ... | 25 |
| 36. பொற்பறிவில் ... | ... | 26 |
| 37. ஆயுமலர்த் தேன் | ... | ,, |
| 38. மணம்வேறு ... | ... | ,, |
| 39. கிக்கைசயிலாத் ... | ... | ,, |
| 40. உத்தமர்தா மீயு | ... | ,, |
| 41. எல்லோர்.தம ... | ... | 27 |
| 42. கல்லார் பலர் ... | ... | ,, |

மாக்மில்லன் கம்பேனியாருடைய

## ஐந்தாம் வாசக புத்தகத்தில்

கூட்டியுள்ள செய்யுட் பாடச் செய்யுட்கள்.

I. ஔவையார் அருளிச்செய்த

## மூதுரை என்று வழங்குகின்ற

# வாக்குண்டாம்.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின் பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின் பக்கம். |
|---|---|---|---|
| 1. நன்றி யொருவற்கு ... | 1 | 15. அடக்க முடையார் ... | 3 |
| 2. நல்லா ரொருவர்க்கு ... | ,, | 16. அற்ற குளத்தின் ... ... | ,, |
| 3. அட்டாலும் பால்சுவையில். | 2 | 17. சீரியர் கெட்டாலும் ... | 4 |
| 4. அடுத்து முயன்றாலும் ... | ,, | 18. ஆழ வமுக்கி ... ... | ,, |
| 5. உற்ற விடத்தில் ... ... | ,, | 19. உடன் பிறந்தார் ... ... | ,, |
| 6. நீரளவே யாகுமாம் ... | ,, | 20. இல்லா ளகத்திருக்க ... | ,, |
| 7. நல்லாரைக் காண்பதுவும் ... | ,, | 21. எழுதியவா றேகாண் ... | ,, |
| 8. தீயாரைக் காண்பதுவும் ... | ,, | 22. கற்பிளவோ டொப்பர் ... | ,, |
| 9. நெல்லுக் கிறைத்தநீர் ... | ,, | 23. நற்றா மரைக்கயத்தின் ... | ,, |
| 10. பண்டு முளைப்பது ... | 3 | 24. நஞ்சுடைமை ... ... | 5 |
| 11. மடல்பெரிது தாழை ... | ,, | 25. மன்னனும் ... ... | ,, |
| 12. கவையாகிக் கொம்பாகி ... | ,, | 26. கல்லாத மாந்தர்க்கு ... | ,, |
| 13. கான மயிலாட ... ... | ,, | 27. சந்தன மென்குறடு ... | ,, |
| 14. வேங்கை வரிப்புலிநோய் ... | ,, | 28. சாந்தனையுந் தீயனவே ... | ,, |

II. பூதஞ்சேந்தனுர் அருளிச்செய்த

# இனிய நாற்பது.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 29. பிச்சைப் புக்காயினும் | ... 18 | 33. ஐவாய வேட்கை | ... 20 |
| 30. குழவி பிணியின்றி | ... 19 | 34. நன்றிப் பயன்றூக்கி | ... ,, |
| 31. கற்ருர்முற் கல்வி... | ... ,, | 35. பத்துக் கொடுத்தும் | ... 21 |
| 32. வருவா யறிந்து ... | ... 20 | | |


III. கபிலதேவர் அருளிச்செய்த

# இன்னு நாற்பது.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 36. சிறையில் கரும்பினை | ... 22 | 39. ஆன்றமைந்த ... | ... 23 |
| 37. பொருளுணர்வார் | ... ,, | 40. தன்னைத்தான் போற்றுத | ... 24 |
| 38. உண்ணுது வைக்கும் | ... 23 | | |


IV. நல்லாதனுர் அருளிச்செய்த

# திரிகடுகம்.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 41. வாளை மீனுள்ளல்... | ... 42 | 43. தானான னென்பான் | ... 42 |
| 42. பகைமுன்னர் வாழ்க்கை | ... 76 | | |

V. கணிமேதாவியார் அருளிச்செய்த

## ஏலாதி.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள் | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 44. இடர்தீர்த்தல் ... | ... 52 | 46. இளமைகழியும் ... | ... 76 |
| 45. நிறையுடைமை ... | ... ,, | | |


VI. காகனூர் அருளிச்செய்த

## நான்மணிக்கடிகை.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 47. எள்ளற்க வென்றும் | ... 48 | 49. வளப்பாத்தி யுள் ... | ... 48 |
| 48. கற்றார்முற் றோன்றா | ... 45 | | |


VII. குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

## நீதிநெறி விளக்கம்.


| பாட்டின் அடி. | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|
| 50. முற்றுமுணர்ந்தவரில்லை ... | 28 |

### மாக்மில்லன் கம்பெனியாருடைய
## ஆறும் வாசக புத்தகத்தில்
### கூட்டியுள்ள செய்யுட்பாடச் செய்யுட்கள்.

### I. ஔவையார் அருளிச்செய்த
# நல்வழி.


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|
| * பாலுந் தெளிதேனும் ... | 6 |
| 1. புண்ணியமாம் ... ... | ,, |
| 2. சாதி யிரண்டொழிய ... | ,, |
| 3. இடும்பைக் கிடும்பை ... | ,, |
| 4. எண்ணி யொருகருமம் ... | ,, |
| 5. வருந்தி யழைத்தாலும் ... | ,, |
| 6. உள்ள தொழிய ... ... | 7 |
| 7. எல்லாப் படியாலும் ... | ,, |
| 8. ஈட்டும் பொருண்முயற்சி ... | ,, |
| 9. ஆற்றுப் பெருக்கு ... | ,, |
| 10. ஆண்டாண்டு தோறும் ... | ,, |
| 11. ஒருநா ளுணவை ... | ,, |
| 12. ஆற்றங் கரையின் ... | ,, |
| 13. ஆவாரை யாரே ... ... | 8 |
| 14. பிச்சைக்கு மூத்த ... | ,, |
| 15. சிவாய நம ... ... | ,, |
| 16. தண்ணீர் நிலநலத்தால் ... | ,, |
| 17. செய்தி வினையிருக்க ... | ,, |
| 18. பெற்றார் பிறந்தார் ... | ,, |
| 19. சேவித்தும் ... ... | ,, |
| 20. அம்மி துணையாக... ... | 9 |
| 21. நீரு நிழலும் ... ... | 9 |
| 22. பாடுபட்டுத் தேடி ... | ,, |
| 23. வேதாளஞ் சேருமே ... | ,, |
| 24. நீறில்லா நெற்றி ... ... | ,, |
| 25. ஆன முதலி லதிகம் ... | ,, |
| 26. மானங் குலங்கல்வி ... | ,, |
| 27. ஒன்றை நினைக்கின் ... | 10 |
| 28. உண்பது நாழி ... ... | ,, |
| 29. மரம்பழுத்தால் ... ... | ,, |
| 30. தாந்தாமுன் செய்தவினை ... | ,, |
| 31. இழுக்குடைய பாட்டிற்கு ... | ,, |
| 32. ஆறிடு மேடும் ... ... | ,, |
| 33. வெட்டெனவை ... ... | ,, |
| 34. கல்லானே யானாலும் ... | 11 |
| 35. பூவாதே காய்க்கும் ... | ,, |
| 36. நண்டுசிப்பி ... ... | ,, |
| 37. வினைப்பயனை ... ... | ,, |
| 38. நன்றென்றும் ... ... | ,, |
| 39. முப்பதா மாண்டு ... | ,, |
| 40. தேவர் குறளும் ... ... | ,, |

II. குமரகுருபரசுவாமிகள் அருளிச்செய்த

# நீதிநெறி விளக்கம்.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | | இசுகிறமணித் திரளின்பக்கம். |
|---|---|---|
| 1. | அறம்பொருள் ... | ... 27 |
| 2. | கல்வியே கற்புடை | ... 28 |
| 3. | எத்துணைய வாயினும் | ... ,, |
| 4. | அவையஞ்சி ... | ... ,, |
| 5. | கலைமகள் வாழ்க்கை | ... ,, |
| 6. | வருந்தித்தாங் கற்றன | ... ,, |
| 7. | கற்றோர்க்கு ... | ... ,, |
| 8. | முற்று முணர்ந்தவர் | ... ,, |
| 9. | தம்மின் மெலியாரை | ... 29 |
| 10. | கல்வி யுடைமை ... | ... ,, |
| 11. | ஆக்கம் பெரியார் | ... ,, |
| 12. | தன்னை வியப்பிப்பான் | ... ,, |
| 13. | பிறராற் பெருஞ்சுட்டு | ... ,, |
| 14. | கற்பன வூழற்றார் ... | ... 29 |
| 15. | கற்றன கல்லார்செவி | ... ,, |
| 16. | கண்ணிற்சொலி ... | ... 30 |
| 17. | குடிகொன்று ... | ... ,, |
| 18. | இன்று கொளற்பால | ... ,, |
| 19. | முடிப்ப முடித்து | ... ,, |
| 20. | ஏதிலார் யாதும் ... | ... ,, |
| 21. | கண்கூடாப் பட்டது | ... ,, |
| 22. | கட்டுப் பிரித்தல் ... | ... 31 |
| 23. | கண்ணோக் கரும்பா | ... ,, |
| 24. | வாக்குக் கவளத்து | ... ,, |
| 25. | உறுதி பயப்ப ... | ... ,, |

### மாக்மில்லன் கம்பெனியாருடைய

## ஏழாம் வாசக புத்தகத்தில்

### கூட்டியுள்ள செயயுட்பாடச் செய்யுட்கள்.

### I. சிவப்பிரகாச சுவாமிகள் செய்தருளிய

# நன்னெறி


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|
| * மின்னெறி சடை... | ... 12 |
| 1. என்று முகமன் ... | ... ,, |
| 2. மாசற்ற நெஞ்சுடையார் | ... ,, |
| 3. தங்கட் குதவிலர் | ... ,, |
| 4. பிறர்க்குதவி ... | ... ,, |
| 5. நீக்க மறுமிருவர்... | ... ,, |
| 6. காதன் மனையாளும் | ... 13 |
| 7. கடலே யனையம் ... | ... ,, |
| 8. உள்ளங் கவர்ந்து | ... ,, |
| 9. மெலியோர் வலிய | ... ,, |
| 10. தங்குறை தீர்வு ... | ... ,, |
| 11. பொய்ப்புலன்கள் | ... ,, |
| 12. வருந்து முயிர் ... | ... ,, |
| 13. பெருக்க மொடு ... | ... 14 |
| 14. தொலையா ... | ... ,, |
| 15. இல்லானுக்கு ... | ... ,, |
| 16. தம்மையும் ... | ... ,, |
| 17. எந்தைநல் கூர்ந்தான் | ... ,, |
| 18. இன்சொலா லன்றி | ... ,, |
| 19. நல்லோர் வரவால் | ... ,, |
| 20. பெரியவர்தந் நோய் | ... 15 |
| 21. எழுத்தறியார் ... | ... 15 |
| 22. ஆக்கு மறிவான் ... | ... ,, |
| 23. பகர்ச்சி மடவார்... | ... ,, |
| 24. உண்டு குணமிங்கு | ... ,, |
| 25. கல்லா வறிவின் ... | ... ,, |
| 26. உடலின் சிறுமை ... | ... ,, |
| 27. கைம்மா றுகவாமல் | ... 16 |
| 28. முனிவினு நல்குவர் | ... ,, |
| 29. உடற்கு வருமிடர் | ... ,, |
| 30. கொள்ளுங்கொடுங் கூற்றம். | ,, |
| 31. பேரறிஞர் ... | ... ,, |
| 32. பன்னும் பனுவல் | ... ,, |
| 33 எள்ளா திருப்ப ... | ... ,, |
| 34. அறிவுடையா ரன்றி | ... 17 |
| 35. கற்ற வறிவினரை... | ... ,, |
| 36. தக்கார்க்கே யீவர் | ... ,, |
| 37. பெரியார்முற் றன்னை | ... ,, |
| 38. நல்லார் செயுங்கேண்மை... | ,, |
| 29. கற்றறியார் செய்யும் | ... ,, |
| 40. பொன்னணியும்... | ... ,, |

## II. முன்றுறையரையனார் செய்தருளிய

# பழமொழி.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|
| 1. வைத்ததனை ... | ... 34 |
| 2. பட்ட வகையால் | ... 39 |
| 3. நோக்கி யிருந்தான் | ... 34 |
| 4. மாய்வதன் முன்னே | ... ,, |
| 5. வழங்கலுந் துய்த்தலும் | ... ,, |
| 6. அருமை யுடைய | ... ,, |
| 7. புன்சொல்லும் ... | ... ,, |
| 8. நன்கொன் றறிபவர் | ... 35 |
| 9. எனக்குத் தகவன்றால் | ... ,, |
| 10. முறைதெரிந்து ... | ... ,, |
| 11. பொல்லாத சொல்லி | ... 37 |
| 12. பயனோக்காது ... | ... 76 |
| 13. முட்டின்றொருவர்... | ... ,, |
| 14. இரப்பவர்க் கீய ... | ... 35 |
| 15. கன்றி முதிர்ந்த .. | ... ,, |
| 16. தெரியா தவர்தம் | ... ,, |
| 17. சீர்த்தக வில்லார் ... | ... 35 |
| 18 நோவ வுரைத்தாரை | ... 37 |
| 19. எண்ணக்குறைபடா | ... ,, |
| 20. இன்றி யமையா ... | ... 36 |
| 21. முற்பெரிய நல்லவினை | ... 37 |
| 22. மறுமனத்தான் ... | ... 36 |
| 23. உணற்கினிய நீர் ... | ... 37 |
| 24. ஆற்றவுங் கற்றார்.. | ... 38 |
| 25. ஏமக்குத் துணையாவார் | ... 76 |
| 26. ஆயிரவ ரானும் | ... 38 |
| 27. நல்லாதவரிடை... | ... ,, |
| 28. உடைப்பெருஞ்செல்வத்து ... | 36 |
| 29. நெறியாலுணராது | ... 76 |
| 30. நிலையியபண்பிலார் | ... 37 |
| 31. பெரிய கட்டார்க்கும் | ... ,, |
| 32. பூத்தாலுங் காயா... | ... 38 |


## III. பட்டணத்துப்பிள்ளை பாடல்.

(சுருக்கம்.)


| பாட்டுக்களின் அடிகள். | இச்சிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|
| 1. ஆவியொடு காயம் | பு. 54 |
| 2. இருப்பது பொய் | ... ,, |
| 3. வருஞ் சதமல்ல ... | ... ,, |
| 4. ஓயாமற் பொய் ... | ... ,, |
| 5. சொல்லால் வரும் | ... ,, |
| 6. ஓடாமற் பாழுக்கு | ... ,, |
| 7. அத்தமும் வாழ்வும் | ... 55 |
| 8 ஒன்றென்றிரு தெய்வ | ... ,, |
| 9. காட்டமென் றேயிரு | ... ,, |
| 10. எரியெனக் கென்னும் | ... ,, |
| 11. பேய்போற் றிரிந்து | ... ,, |

IV. குமரகுருபர சுவாமிகள் செய்தருளிய

## சகலகலாவல்லிமாலை.



| பாட்டுக்களின் அடிகள். | இசுசிறுமணித் திரளின்பக்கம். | பாட்டுக்களின் அடிகள். | இசுசிறுமணித் திரளின்பக்கம். |
|---|---|---|---|
| 1. வெண்டா மரைக்கன்றி ... | 56 | 6. பண்ணும் பரதமும் ... | 56 |
| 2. நாடும் பொருட்சுவை ... | ,, | 7. பாட்டும் பொருளும் ... | ,, |
| 3. அளிக்குஞ் செழுந்தமிழ் ... | ,, | 8. சொல்விற்பனமும் ... | ,, |
| 4. தூக்கும் பனுவல்... ... | ,, | 9. சொற்கும் பொருட்கும் ... | ,, |
| 5. பஞ்சப் பிதம் ... ... | ,, | 10. மண்கண்ட ... ... | ,, |

# சிறுமணித்திரள்.

## திரள்—I.

## வாக்குண்டாம்.

### காப்பு.

வாக்குண்டா நல்ல மனமுண்டா மாமலராள்
நோக்குண்டா மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

### நூல்.

1. நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்றருத லால்.

2. நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த வுபகாரம்
நீர்மே லெழுத்திற்கு நேர்.

3. இன்னா விளமை வறுமைவந் தெய்தியக்கால்
இன்னா வளவி லினியவும்—இன்னாத
நாளல்லா நாள்பூத்த நன்மலரும் போலுமே
ஆளில்லா மங்கைக் கழகு.

4. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலு நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலு மேன்மக்கண் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

5. அடுத்து முயன்றாலு மாகுநா ளன்றி
எடுத்த கருமங்க ளாகா—தொடுத்த
உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.

6. உற்ற விடத்தி லுயிர்வழங்குந் தன்மையோர்
பற்றலரைக் கண்டாற் பணிவரோ—கற்றூண்
பிளந்திறுவ தல்லாற் பெரும்பாரந் தாங்கிற்
றளர்ந்து வளையுமோ தான்.

7. நீரளவே யாகுமா நீராம்ப லன்கற்ற
நூலளவே யாகுமா நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வங்
குலத்தளவே யாகுங் குணம்.

8. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவு நன்றேயாம்—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.

9. தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதேயாந்—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே யவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது.

10. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லா ரொருவ ருளரே யவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யு மழை.

11. பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனான் முளையாதாம்—கொண்டபே
ராற்ற லுடையார்க்கு மாகா தளவின்றி
யேற்ற கருமஞ் செயல்.

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரு மாகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகி விடும்.

13. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம்.

14. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

15. வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக் காகார மானாற்போற்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த வுபகாரங்
கல்லின்மே லிட்ட கலம்.

16. அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு.

17. அற்ற குளத்தி னறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர்—அக்குளத்திற்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டி யுறுவா ருறவு.

18. சீரியர் கெட்டாலுஞ் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகு மென்னாகு
மண்ணின் குடமுடைந்தக் கால்.

19. ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலில்
நாழி முகவாது நானாழி—தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன்.

20. உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்கவேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு.

21. இல்லா ளகத்திருக்க வில்லாத தொன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின்—இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

22. எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமங்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேன்
முற்பவத்திற் செய்த வினை.

23. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்.

24. நற்றா மரைக்கயத்தி னல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை யுகக்கும் பிணம்.

25. நஞ்சுடைமை தானறிந்து நாகங் கரந்துறையும
அஞ்சாப் புறங்கிடக்கு நீர்ப்பாம்பு—நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் காப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

26. மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு.

27. கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

28. சந்தன மென்குறடு தான்றேய்ந்த காலத்துங்
கந்தங் குறைபடா தாதலால்—தந்தந்
தனஞ்சிறிய ராயினுந் தார்வேந்தர் கெட்டால்
மனஞ்சிறிய ராவரோ மற்று.

29. மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாந்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம்.

30. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்ப ரறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

வாக்குண்டாம் முற்றிற்று. ஆகச் செய்யுள்—30.

13. ஆவாரை யாரே யழிப்ப ரதுவன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவ—ரோவாம
லையம் புகுவாரை யாரே விலக்குவார்
மெய்யம் புவியதன் மேல்.

14. பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா
லிச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால வுறும்.

15. சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—யுபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.

16. தண்ணீர் நிலநலத்தாற் றக்கோர் குணங்கொடையாற்
கண்ணீர்மை மாறாக் கருணையாற்—பெண்ணீர்மை
கற்பழியா வாற்றாற் கடல்சூழ்ந்த வையகத்து
ளற்புதமா மென்றே யறி.

17. செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கா
லெய்த வருமோ விருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல்.

18. பெற்றார் பிறந்தார் பெருநாட்டார் பேருலகி
லுற்றா ருகந்தா ரெனவேண்டார்—மற்றோ
ரிரணங் கொடுத்தா லிடுவ ரிடாரே
சரணங் கொடுத்தாலுந் தாம்.

19. சேவித்துஞ் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்
பாவித்தும் பாராண்டும் பாட்டிசைத்தும்—போவிப்பம்
பாழி னுடம்பை வயிற்றின் கொடுமையா
னாழி யரிசிக்கே நாம்.

20. அம்பி துணையாக வாறிழிந்த வாறொக்கும்
வெம்மை மிகுவே சியர்நேயம்—இம்மை
மறுமைக்கு நன்றன்று மாநிதியம் போக்கி
வெறுமைக்கு வித்தாய் விடும்.

21. நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வு—மூரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையா டான்.

22. பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போனபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.

23. வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை.

24. நீறில்லா நெற்றிபாழ் நெய்யில்லா வுண்டிபா
ழாறில்லா வூருக் கழகுபாழ்—மாறி
லுடன்பிறப் பில்லா வுடம்புபாழ் பாழே
மடக்கொடி யில்லா மனை.

25. ஆன முதலி லதிகஞ் செலவானா
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு.

26. மானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்.

27. ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து—மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்.

28. உண்பது நாழி யுடுப்பது நான்குமுழ
மெண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்தனையுஞ் சஞ்சலமே தான்.

29. மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போற் கரவா தளிப்பரே
லுற்றா ருலகத் தவர்.

30. தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே—வேந்தே
யொறுத்தாரை யென்செயலா மூரெல்லா மொன்றாய்
வெறுத்தாலும் போமோ விதி.

31. இழுக்குடைய பாட்டி னிசைநன்று சால
வொழுக்க முயர்குலத்தி னன்று—வழுக்குடைய
வீரத்தி னன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தி னன்று தனி.

32. ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வ
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
வுண்ணீர்மை வீறு முயர்ந்து.

33. வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

34. கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி
னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ—ரில்லானை
இல்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்
செல்லா தவன்வாயிற் சொல். [டாள்

35. பூவாதே காய்க்கு மரமுமுள மக்களுளு
மேவாதே நின்றுணர்வார் தாமுளரே—தூவா
விரைத்தாலு நன்றாகா வித்தெனவே பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

36. நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக்
கொண்ட கருவழிக்குங் கொள்கைபோ—லொண்டொடி
போதந் தனங்கல்வி பொன்றவருங் காலமயன்
மாதர்மேல் வைப்பார் மனம்.

37. வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலா
மனைத்தாய நூலகத்து மில்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லாற் கவலையுறே னெஞ்சமே
விண்ணுறுவார்க் கில்லை விதி.

38. நன்றென்றுந் தீதென்று நானென்றுந் தானென்று
மன்றென்று மாமென்று மாகாதே—நின்றநிலை
தானதாந் தத்துவமாஞ் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்.

39. முப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமற் றன்னுட் பெறுணாயின்—செப்பும்
கலையுணர்ச்சி வீணாங் கதியடையும் பேறே
இலையவனுக் கென்றுநீ யெண்.

40. தேவர் குறளுந் திருநான் மறைமுடிவு
மூவர் தமிழு முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லு
மொருவா சகமென் றுணர்.

நல்வழி முற்றிற்று. ஆகச் செய்யுள்—40.

# திரள்—III.

# நன்னெறி.

## காப்பு.

மின்னெறி சடைமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

## நூல்.

1. என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர்-துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவு நயந்து.

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—வீசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

3. தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியாற் றுங்கொள்க—இங்கிதங்கள்
ஒன்றினா லுஞ்சுரவா துள்ளொளிக்கு மாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து.

4. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும்—பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

5. நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம்.

6. காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே—யோதுகலை [மாற்
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கு
கண்ணிரண்டு மொன்றையே காண்.

7. கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி—விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும்.

8. உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு.

9. மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறைய புள்ளரசைப் பார்த்து.

10. தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைநீர்க் கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே னின்று.

11. பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந்—துப்பிற்
சுழற்றுங்கோல் கற்றூணைச் சூறா வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் னூறும்பு.

12. வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை—திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலா நிற்றல் வியப்பு.

13. பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர்—வரற்கு
மலையளவு நின்றகற்பின் மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர்.

14. தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த—விலையால்
இரைக்கும்வண் டூதுமல ரீர்ங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு.

15. இல்லானுங் கன்பிங் கிடம்பொரு ளேவலென்
றெல்லா மிருந்துமற் றென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு.

16. தம்மையுந் தங்க டலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல்.

17. எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் மீகை மறுப்பரோ—பைந்தொடீஇ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி.

18. இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செய்
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர் வரவாற் பொங்குங் கடல்.

19. நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர.

20. பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க—தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்.

21. எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணி னிலையாம்—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை.

22. ஆக்கு மறிவா னலது பிறப்பினுன்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க—நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு.

23. பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்றல்
திகழ்ச்சி தருநெஞ்சத் திட்பம்—நெகிழ்ச்சி
பெறும்பூங் கொடியிடைப் பேதாய் பலகால்
எறும்பூரக் கற்குழியு மே.

24. உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றே
காக்கை விரும்புங் கனி.

25. கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே—வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள்.

26. உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார்—மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதன்
விண்ணளவா யிற்றோ விளம்பு.

27. கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வர்—அம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று.

28. முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை.

29. உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபாத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக—நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான்.

30. கொள்ளுங்கொடுங்கூற்றங்கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே—வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு.

31. பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது.

32. பன்னும் பனுவற் பயன்றே ரறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே—நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு, வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான்.

33. எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரே—தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல்.

34. அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு.

35. கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தா மென்று மதியாரே—வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம்.

36. தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ—ரெக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்.

37. பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழும்—தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த பொலிகுழலாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து.

38. நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே—நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம்.

39. கற்றறியார் செய்யுங் கடுநட்புந் தாங்கூடி
உற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே—பொற்றொடீஇ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
அன்றே மணமுடைய தாம்.

40. பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார்—மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண்.

நன்னெறி முற்றிற்று. ஆகச் செய்யுள்—40.

திரள்—IV.

# இனிய நாற்பது.

(சுருக்கம்.)

1. பிச்சை புக்காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு.

2. யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
யூனைத்தின் றானைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு.

3. கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னாகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு.

4. ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படையக் கோட லினிது.

5. தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது.

6. கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு.

7. குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயரிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந் தீர்வின்றே லினிது.

8. மான மழிந்தபின் வாழாமை முன்னினிதே
தான மழியாமை தானடங்கி வாழ்வினிதே
ஊனமொன் றின்றி யுயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லா மினிது.

9. குழவி தளர்நடையைக் காண்ட லினிதே
அவர்மழலை கேட்ட லமிழ்தி னினிதே
வினையுடையான் வந்தடைந்து வெய்துறும்போழ்து
மனனஞ்சா னாக லினிது.

10. கற்றார்முற் கல்வி யுரைத்தன் மிகவினிதே
மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே
எட்டுணை யானு மிரவாது தானீதல்
எத்துணையு மாற்ற வினிது.

11. நட்டார்ப் புறங்கூறான் வாழ்த னனியினிதே
பட்டாங்கு பேணிப் பணிந்தொழுகன் முன்னினிதே
முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீதலே நன்று.

12. சலவரைச் சாரா விடுத லினிதே
புலவர்தம் வாய்மொழி போற்ற லினிதே
மலர்தலை ஞாலத்து மன்னுயிர்க் கெல்லாந்
தகுதியால் வாழ்த லினிது.

13. பிறன்கைப் பொருள்வவ்வான் வாழ்த லினிதே
அறம்புரிந் தல்லவை நீக்க லினிதே
மறந்தேயு மாணா மயரிகட் சேராத்
திறந்தெரிந்து வாழ்த லினிது.

14. வருவா யறிந்து வழங்க லினிதே
யொருவர்பங் காகாத வூக்க மினிதே
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்த லினிது.

15. வெல்வது வேண்டி வெகுளாதா னோன்பினிதே
ஒல்லுந் துணையுமொன் றுய்ப்பான் பொறையினிதே
இல்லது காமுற் றிரங்கி இடர்ப்படார்
செய்வது செய்த லினிது.

16. ஐவாய வேட்கை யவாவடக்கன் முன்னினிதே
கைவாய்ப் பொருள்பெறினும் கல்லார்கட் டீர்வினிதே
நில்லாத காட்சி நிறையின் மனிதரைப்
புல்லா விடுத லினிது.

17. நன்றிப் பயன்றூக்கி வாழ்த னனியினிதே
மன்றங் கொடும்பா டுரையாத மாண்பினிதே
யன்றறிவார் யாரென் றடைக்கலம் வௌவாத
நன்றியி னன்கினிய தில்.

18. தானங் கொடுப்பான் றகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே
ஊனங் கொண்டாடா ருறுதி யுடையவை
கோண்முறையாற் கோட லினிது.

19. கயவரைக் கையிகந்து வாழ்த லினிதே
உயர்வுள்ளி யூக்கம் பிறத்த லினிதே
எளிய ரிவரென் றிகழ்ந்துரையா ராகி
ஒளிபட வாழ்த லினிது.

20. அடைந்தார் துயர்கூரா வாற்ற லினிதே
கடங்கொண்டுஞ் செய்வன செய்த லினிதே
சிறந்தமைந்த கேள்விய ராயினு மாராய்ந்
தறிந்துரைத்த லாற்ற லினிது.

21. கற்றறிந்தார் கூறுங் கருமப் பொருளினிதே
பற்றமையா வேந்தன்கீழ் வாழாமை முன்னினிதே
தெற்றென வின்றித் தெளிந்தாரைத் தீங்கூக்காப்
பத்திமையிற் பாங்கினிய தில்.

22. எல்லியம் போது வழங்காமை முன்னினிதே
சொல்லுங்காற்சோர்வின்றிச்சொல்லுதன்மாண்பினிதே
புல்லிக் கொளினும் பொருளல்லார் தங்கேண்மை
கொள்ளா விடுத லினிது.

23. சிற்றா ளுடையான் படைக்கல மாண்பினிதே
நட்டா ருடையான் பகையாண்மை முன்னினிதே
யெத்துணையு மாற்ற வினிதென்ப பால்படுங்
கற்றா வுடையான் விருந்து.

24. பிச்சை புக்குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சி லிருந்து துயர்கூரா மாண்பினிதே
யுற்றபே ராசை கருதி யறனொரூஉ
மொற்க மிலாமை யினிது.

25. பத்துக் கொடுத்தும் பதியிருந்து வாழ்வினிதே
வித்துக்குற் றுண்ணா விழுப்ப மிகவினிதே
பற்பல நாளும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றலிற் காழினிய தில்.

இனிய நாற்பது முற்றிற்று. ஆகச் செய்யுள்—25.

திரள்—V

# இன்னா நாற்பது.

(சுருக்கம்.)

1. கொடுங்கோன் மறமன்னர் கீழ்வாழ்த லின்னா
நெடுநீர் புணையின்றி நீந்துத லின்னா
கடுமொழி யாளர் தொடர்பின்னா வின்னா
தடுமாறி வாழ்த லுயிர்க்கு.

2. எருதி லுழவர்க்குப் போகிர மின்னா
கருவிகண் மாறிப் புறங்கொடுத்த லின்னா
திருவுடை யாரைச் செறலின்னா வின்னா
பெருவலியார்க் கின்னா செயல்.

3. சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
புரைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை.

4. ஆற்ற லிலாதான் பிடித்த படையின்னா
நாற்ற மிலாத மலரின் வனப்பின்னா
தேற்ற மிலாதான் றுணிவின்னா வாங்கின்னா
மாற்ற மறியா னுரை.

5. பொருளுணர்வா ரில்வழிப் பாட்டுரைத்த லின்னா
இருள்கூர் சிறுநெறித் தாந்தனிப் போக்கின்னா
அருளிலார் தங்கட் செலவின்னா வின்னா
பொருளிலார் வண்மை புரிவு.

6. உடன்பா டிலாத மனைவி தொழிலின்னா
இடனில் சிறியாரோ டியாத்த நட்பின்னா
இடங்கழி யாளர் தொடர்பின்னா வின்னா
கடமுடையார் காணப் புகல்.

7. ஆன்றமைந்த சான்றோருட் பேதை புகலின்னா
மான்றிருண்ட போழ்தின் வழங்கல் பெரிதின்னா
நோன்றமைந்து வாழாதார் நோன்பின்னா வாங்கின்னா
ஈன்றாளை யோம்பா விடல்.

8. உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா
கண்ணி லொருவன் வனப்பின்னா வாங்கின்னா
எண்ணிலான் செய்யுங் கணக்கு.

9. குலத்திற் பிறந்தவன் கல்லாமை யின்னா
நிலத்திட்ட நல்வித்து நாறாமை யின்னா
நலத்தகையார் நாணின்மை யின்னாவாங் கின்னா
கலத்தல் குலமில் வழி.

10. மாரிநாட் கூவுங் குயிலின் குரலின்னா
வீரமி லாளர் கடுமொழிக் கூற்றின்னா
மாரி வளம்பொய்ப்பி னூர்க்கின்னா வாங்கின்னா
மூரி யெருத்தி னுழவு.

11. ஈத்த வகையா னுவவாதார்க் கீப்பின்னா
பாத்துண வில்லா ருழைச்சென் றுணலின்னா
மூத்த விடத்துப் பிணியின்னா வாங்கின்னா
வேத்தவை வீணா முரை.

12. பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியார்க்குத் தீய செயல்.

13. கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
அல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா
இல்லார் வாய்ச்சொல்லி னயமின்னா வாங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல்.

14. பண்ணமையா யாழின்கீழ்ப் பாடல் பெரிதின்னா
எண்ணறியா மாந்த ரொழுக்குநாட் கூற்றின்னா
மண்ணின் முழவி னொலியின்னா வாங்கின்னா
தண்மையி லாளர் பகை.

15 தன்னைத்தான் போற்றா தொழுகுத னற்கின்னா
முன்னை யுரையார் புறமொழிக் கூற்றின்னா
நன்மையி லாளர் தொடர்பின்னா வாங்கின்னா
தொன்மை யுடையார் கெடல்.

16. பொருளிலான் வேளாண்மை காமுறுத லின்னா
நெடுமாட நீணகர்க் கைத்தின்மை யின்னா
அடுமனை பார்த்திருந் தூணின்னா வின்னா
கெடுமிடத்துக் கைவிடுவார் நட்பு.

இன்னா நாற்பது முற்றிற்று. ஆகச் செய்யுள்—16.

## திரள்—VI.

# நீதிவெண்பா.

(சுருக்கம்.)

1. தாமரை பொன்முத்து சாமரைகோ ரோசனைபால்
பூமரு தேன்பட்டு புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கே பிறந்தாலு மெள்ளாரே நல்லோர்க
ளெங்கே பிறந்தாலு மென்.

2. மென்மதுர வாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியி னாலிகழு மண்ணுலக—நன்மொழிசே
ரோது குயிலேதங் குதவியது "கத்தபந்தா
னேதபரா தஞ்செய்த தின்று".

3. பகைசேரு மெண்ணான்கு பற்கொண்டே நன்னா
வகைசேர் சுவையருந்து மாபோற்—றொகைசேர்
பகைவரிட மெய்யன்பு பாவித் தவராற்
சுகமுறுத லல்லார் தொழில்.

4. நொய்தாந் திரணத்தி னொய்தாகும் வெண்பஞ்சு
நொய்தா மிரப்போ னுவலுங்கா—னொய்யசிறு
பஞ்சுதனி னொய்யானைப் பற்றாதே காற்றணுக
வஞ்சுமவன் கேட்ப தறிந்து.

5. ஆசைக் கடியா னகிலலோ கத்தினுக்கு
மாசற்ற நல்லடியா னாவானே—ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான்.

6. ஈக்கு விடந்தலையி லெய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடங்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம்.

7. கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி.

8. கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலுங்
கற்பூர மாமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல விருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல்.

9 சிற்றுணர்வோ ரென்றுஞ் சிலுசிலுப்பார் நன்றமைந்த
முற்றுணர்வோ ரென்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி லோசை மிகுமே விரிபசும்பொ
னொண்கலத்தி லுண்டோ வொலி.

10. இன்ன றரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—யன்ன
தழித்தலுந் துன்பமே யந்தோ பிறர்பா
லிழத்தலுந் துன்பமே யாம்.

11. பொற்பறிவில் லாதபல புத்திரப்பே றெய்தலினோர்
நற்புதல்வ னைப்பெறுத னன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனா லேதுபய
னொன்றமையா தோகரிக்கன் றோது.

12. ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போலிரப்போ
ரீயு மவர்வருந்தா தேற்றலறந்—தூயவிளம்
பச்சிலையைக் கீடமணம் பற்றி யரிப்பதுபோ
லச்சமுற வாங்க லகம்.

13. மனம்வேறு சொல்வேறு மன்னு தொழில்வேறு
வினைவேறு பட்டவர்பான் மேவு—மனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளு மொன்
கனமொன்று மேலவர்தங் கண். [றே

14. நிந்தையிலாத் தூயவரு நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றான்பா லருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார்.

15. நல்லொழுக்க மில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்க மில்லாச்சொ னண்ணுமே—சொல்லு
பாம்பெனவுன் னாரோ பழுதையே யானாலுந் [மிடம்
தாம்பமரும் புற்றடுத்தாற் சொல்.

16. வாக்குநயத் தானறிக கற்றவரை மற்றவரை
யாக்கைநயத் தாலறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையா லன்றியே
கோலத் தறிவாரோ கூறு.

17. உத்தமர்தா மீயுமிடத் தோங்குபனை போல்வரே
மத்திமர்தாந் தெங்குதனை மானுவரே—முத்தலரு
மாங்கமுகு போல்வ ரதம ரவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து.

18. எல்லோர் தமக்கு மினிதுதவ லன்றியே
நல்லோர் தமக்குதவி நாடாரே—வல்லதரு
நாமநிதி மேக நயந்துதவ லன்றியே
தாமுதவி நாடுமோ சாற்று.

19. கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினுநூல்
வல்லா னொருவனையே மானுவரோ—அல்லாரும்
எண்ணிலா வான்மீ னிலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு.

20. சந்தனத்தைச் சார்தருவுந் தக்க மணங்கமழும்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற—அந்தவனம்
தானுமச் சந்தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்.

நீதிவெண்பா முற்றிற்று. ஆகச் செய்யுள்—20.

திரள்—VII.

# நீதிநெறி விளக்கம்.

(சுருக்கம்.)

காப்பு.

நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று!

நூல்.

1. அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை.

2. கல்வியே கற்புடைப் பெண்டிராப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே தீங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு.

3. எத்துணைய வாயினுங் கல்வி யிடமறிந்
துய்த்துணர் வில்லெனி னில்லாகு—முய்த்துணர்ந்துஞ்
சொல்வன்மை யின்றெனி னென்னா மஃதுண்டேற்
பொன்மலர் நாற்ற முடைத்து.

4. அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லா
ரவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
யீத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று.

5. கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினு
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

6. வருந்தித்தாங் கற்றன வோம்பாது மற்றும்
பரிந்து சிலகற்பான் றொடங்கல்—கருந்தனங்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல்.

7. கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
யழகுக் கழகுசெய் வார்.

8. முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க—சிற்றுளியாற்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

9. தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
யம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று.

10. கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படு—மில்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

11. ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனிதாழ்ப—தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

12. தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றாற்—றன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

13. பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்தி
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

14. கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றாத்தைவா யங்காத்தன்—மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

15. கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று—முற்றுணர்ந்துந்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
வேதிலரை நோவ தெவன்.

16. கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும்—தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

17. குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்று
மடிகொன்று பால்கொளலு மாண்பே—குடியோம்பிக்
கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமே மாநிதியம்
வெள்ளத்தின் மேலும் பல.

18. இன்று கொளற்பால நாளைக் கொளப்பொரு
ளின்று குறையிரப்ப நேர்படான்—சென்றொருவ
னாவன கூறி னெயிறலைப்பா னறலைக்கும்
வேடலன் வேந்து மலன்.

19. முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
யுடுப்ப வுடுத்துண்ப வுண்ணு—விடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

20. ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றேர் டுணையாத் தெரிதந்துங்—குற்றம்
அறிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

21. ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு—நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

22. கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகு—மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
போஎ பெருமூச் செறிந்து.

23. நட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுத—றக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

24. கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றோ
சலியாத கற்ப தரு.

25. வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா—வாங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமா
லாருங் கிளையோ டயின்று.

26. உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப—விறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க றீதன்றா லல்லனபோ
லாவனவு முண்டு சில.

27. மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

28. சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார்—நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

29. புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டுங்—கழிபெருங்
கண்ணோட்டஞ் செய்யார் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

30. மனத்த கறுப்பெனி னல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகு—மெனைத்துணையுந்
தீயவே செய்யினு நல்லவாக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

31. இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—யனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கும் மெய்பொடிப்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பச்

32. நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்து
மல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்.

33. பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா—முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

34. வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

35. ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்த
லோகோ கொடிது கொடிதம்மா—நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றாவா விவரென் செய்வார்.

36. சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார்—அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினு
மொண்மையிற் றீர்ந்தொழுக லார்.

37. செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிக மென்னும்—செயிர்த்துரைப்பின்
நெஞ்சு நோமென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

38. பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நற்பயனுக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்
கைவிதிர்த் தஞ்சப் படும். [வான்போல்

39. தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
றெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும்—தெய்வம்
இலதென்பார்க் கில்லைதம் மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

40. தீயசெயல் செய்வா ராக்கம் பெருகினுந்
தீயன தீயனவே வேறல்ல—தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்.

41. வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
யங்கங் குலைவ தறிவு.

42. மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும்—கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

நீதிநெறி விளக்கம் முற்றிற்று. ஆகச் செய்யுள்—42.

# திரள்—VIII.

# பழமொழி.

(சுருக்கம்.)

1. வைத்ததனை வைப்பென் றுணரற்க தாமதனைத்
துய்த்து வழங்கி யிருபாலும்—அத்தகத்
தக்குழி நோக்கி யறஞ்செய்யி னஃதன்றோ
எய்ப்பினில் வைப்பென் பது.

2. நோக்கி யிருந்தா ரிமைக்கு மளவின்கண்
நோக்கப் படினு முணங்கலைப்புட் கவரும்
போற்றிப் புறந்தந் தகப்பட்ட வொண்பொருட்குங்
காப்பானிற் கள்வன் மிகும்.

3. மாய்வதன் முன்னே வகைப்பட்ட நல்வினையை
ஆய்வின்றிச் செய்யாதார் பின்னை வழிநினைந்து
நோய்காண் பொழுதி னறஞ்செய்வார்க் காணாமை
நாய்காணிற் கற்காணா வாறு.

4. வழங்கலுந் துய்த்தலுந் தேற்றாதான் பெற்ற
முழங்கு முரசுடைச் செல்வம்—தழங்கருவி
வேய்முற்றி முத்துதிரும் வெற்ப வதுவன்றோ
நாய்பெற்ற தெங்கம் பழம்.

5. அருமை யுடைய பொருளுடையார் தங்கட்
கரும முடையாரை நாடார்—எருமைமேல்
நாரை துயில்வதியு மூர குளந்தொட்டுத்
தேரை வழிச்சென்றா ரில்.

6. புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின் றுணர்கிற்பார்
வன்சொல் வழியாய் வாழ்தலு முண்டாமோ
புன்சொ லிடர்ப்படுப்ப தல்லா லொருவனை
இன்சொ லிடர்ப்படுப்ப தில்.

7. நன்கொன் றறிபவர் நாழி கொடுப்பவர்க்
கென்று முறுதியே சூழ்க வெறிதிரை
சென்றுலாஞ் சேர்ப்ப வதுபோல நீர்போயு
மொன்றிரண்டாம் வாணிக மில்.

8. எனக்குத் தகவன்றா லென்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் றானாய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் றென்னவனுங் காணார்
எனச்செய்யார் மாணா வினை.

9. முறைதெரிந்து செல்வர்க்கு நல்கூர்ந்த வர்க்கும்
இறைதிரியா நேரொக்கல் வேண்டும்—முறைதிரிந்து
நேரொழுகா னாயி னதுவா மொருபக்கம்
நீரொழுகிப் பாலொழுகு மாறு.

10. இரப்பவர்க் கீயக் குறைபடு மென்றெண்ணிக்
கரப்பவர் கண்டறியார் கொல்லோ—பரப்பிற்
றுறைத்தோணி நின்றுலாந் தூங்குநீர்ச் சேர்ப்ப
இறைத்தோறு மூறுங் கிணறு.

11. கன்றி முதிர்ந்த கழியப்பன் றாட்செயினும்
என்றுஞ் சிறியார்க ணென்றானுந் தோன்றாவாம்
ஒன்றாய் விடினு முயர்ந்தார்ப் படுங்குற்றங்
குன்றின்மே லிட்ட விளக்கு.

12. தெரியா தவர்தந் திறனில்சொற் கேட்டால்
பரியாதார் போல விருக்க—பிரிவில்லா
வம்பலர் வாயை யவிப்பான் புகுவாரேல்
அம்பலந் தாழ்க்கூட்டு வார்.

13. நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தங்கலியிற்
கூர்த்தவரைத் தானலிதல் கோளன்றால் சான்றோர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதப்பட்டு நாய்கௌவிற்
பேர்த்துநாய் கௌவினா ரில்.

14. நாடி நமரென்று நன்குபுறந் தந்தார்க்குக்
கேடு பிறரோடு சூழல் கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்.

15. இன்றி யமையா விருமுது மக்களும்
பொன்றி னமைகண்டும் பொருள்பொருளாக் கொள்
ஒன்றும் வகையா னறஞ்செய்க வூர்ந்துருளின் [பவோ
குன்றும் வழிதடுப்ப தில்.

16. தமரேயுந் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்
அமரா ததனை யகற்றலே வேண்டும்
அமையாரும் வெற்ப வணியாரே தம்மைத்
தமவேனுங் கொள்ளாக் கலம்.

17. மறுமனத்தா னல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்த னாகி யொழுகின்—செறுமனத்தார்
பாயிரங் கூறிப் படைதொக்கா லென்செய்ப
ஆயிரங் காக்கைக்கோர் கல்.

18. கற்றறிந்தார் கண்ட தடக்க மறியாதார்
பொச்சாந்துந் தம்மைப் புகழ்ந்துரைப்பார்—தெற்ற
வறைகல் லருவி யணிமலை நாட
நிறைகுட நீர்தளும்ப லில்.

19. கோவாத சொல்லுங் குணனில்லா மக்களை
நாவா யடக்க லரிதாகும்—நாவாய்
களிகள்போற் றூங்குங் கடற்சேர்ப்ப வாங்கி
வளிதோட் கிடுவரோ வில்.

20. உடைப்பெருஞ் செல்வத் துயர்ந்த பெருமை
அடக்கமி லுள்ளத்த னாகி—நடக்கையின்
ஒள்ளிய னல்லான்மேல் வைத்தல் குரங்கின்கைக்
கொள்ளி கொடுத்து விடல்.

21. பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும்—நல்லாய்
மணலுண் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்.

22. மிக்குப் பெருகி மிகுபுனல் பாய்ந்தாலும்
முப்பொழிதல் செல்லா வொலிகடல்போன்—மிக்க
வினைநல நன்குடைய வாயினு மென்று
மனநல மாகாவாங் கீழ்.

23. நோவ வுரைத்தாரைத் தாம்பொறுக் கல்லாதார்
நாவி னொருவரை வைதால் வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணா யதுவன்றோ
தீயில்லை யூட்டுந் திறம்.

24. முற்பெரிய நல்வினை முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ—வைப்போ
டிகலிப் பொருள்செய்ய வெண்ணியக்கா லென்னா
முதலிலார்க் கூதிய மில்.

25. உணற்கினிய வின்னீர் பிறிதுழி யில்லென்னுங்
கிணற்றகத்துத் தேரைபோ லாகார்—கணக்கினை
முற்றப் பகலு முனியா தினிதோதிக்
கற்றலிற் கேட்டலே நன்று.

26. நிலைஇய பண்பிலார் நேரல்லா ரென்றொன்
றுளைய வுரையா துறுதியே கொள்க
வளையொலி முன்கையாய் வாங்கியிருந்து
தொளையெண்ணா ரப்பந்தின் பார்.

27. பெரிய நட்டார்க்கும் பகைவர்க்குஞ் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போற் சொல்லி யவருள்
ஒருவரொடு மொன்றி யொருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென் பார்.

28. ஆற்றவுங் கற்று ரறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையுஞ் செல்லாத நாடில்லை யந்நாடு
வேற்றுநா டாகா தமவேயா மாயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்.

29. ஆயிரவ ராலு மறிவிலார் தொக்கக்கால்
மாயிரு ஞாலத்து மாண்பொருளவன் போல்கலார்
பாயிரு ளீக்கு மதியம்போற் பன்மீனுங்
காய்கலா வாகு நிலா.

30. கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை யொருவருக்கு—நல்லாய்
இழுக்கத்தின் மிக்க விழிவில்லை யில்லை
ஒழுக்கத்தின் மிக்க வுயர்வு.

31. பூத்தாலுங் காயா மரமுள மூத்தாலும்
நன்கறியார் தாமு நனியுளர்—பாத்தி
விதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுந் தோன்றா துணர்வு.

பழமொழி முற்றிற்று. ஆகச் செய்யுள்—31.

திரள்—IX.

# அறநெறிச்சாரம்.

(சுருக்கம்.)

1. காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார்—மாலை
கிடந்தா னெழுத லரிதான்மற் றென்கொல்
அறங்காலை செய்யாத வாறு.

2. சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி—தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம்.

3. பட்ட வகையாற் பலரும் வருந்தாமற்
கட்டுடைத் தாகக் கருதிய நல்லற
முட்டுடைத் தாக விடைதவிர்ந்து வீழ்தலில்
நட்டாற் றுதலே நன்று.

4. பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

5. தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தா னெய்தாப் பயனில்லை—தன்னைக்
குடிகெடுக்கு நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு.

6. நின்னை யறப்பெறு கிற்கிலே னன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன்—நின்னை
அறப்பெறு கிற்பேனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள்.

7. உள்ளூ ரிருந்துந்த முள்ளமறப் பெற்றாரேற்
கள்ளவிழ் சோலையாங் காட்டுளார்—காட்டுள்ளும்
உள்ள மறப்பெறு கல்லாரே னூட்டுள்ளும்
நண்ணி நடுவூரு ளார்.

8. காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே—காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும்.

9 விருந்து புறந்தரான் வேளாண்மை செய்யான்
பெருந்தக் கவரையும் பேணான்—பிரிந்துபோய்க்
கல்லான் கடுவினை மேற்கொண் டொழுகுமே
லில்வாழ்கை யென்ப திருள்.

10. அட்டுண்டு வாழ்வார்க் கதிதிக ளெஞ்ஞான்று
மட்டுண்ணு மாட்சி யுடையவர்—அட்டுண்டு
வாழ்வார்க்கு வாழ்வா ரதிதிக ளென்றுரைத்தல்
வீழ்வார்க்கு வீழ்வார் துணை.

11. மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவராய்ப் பூண்டேர்ப்பி னல்லால்—ஒருவரா
லில்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று.

12. நாற்றமொன் றில்லாத பூவொடு சாந்தினை
நாற்றந்தான் வேண்டி யதுபோலும்—ஆற்ற
மறுவறு சீலமு நோன்புமில் லாரை
உறுபயன் வேண்டிக் கொளல்.

13. இம்மை யடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை யுயர்கதிக் குய்த்தலான்—மெய்ம்மையே
பட்டாங் கறமுரைக்கும் பண்புடை யாளரே
நட்டா ரெனப்படு வார்.

14. வைகலு நீருட் கிடப்பினுங் கல்லிற்கு
மெல்லென்றல் சால வரிதாகு மஃதேபோல்
வைகலு நல்லறங் கேட்பினுங் கீழ்கட்குக்
கல்லினும் வல்லென்னு நெஞ்சு.

15. பாம்புண்ட நீரெல்லா நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீ ரமுதமாம்—ஓம்பற்
கொளியா முயர்ந்தோர்க்கு ஞான மதுபோல்
களியாங் கடையாயார் மாட்டு.

16. கல்லா வொருவனைக் காரணங் காட்டினும்
இல்லைமற் றென்று மறனுணர்தல்—நல்லாய்
நறுநெய் நிறைபுழுக்க லுய்ப்பினு மூழை
பெறுமோ சுவையுணரு மாறு.

17. கட்டளை கோடித் திரியிற் கருதிய
இட்டிகையுங் கோடு மதுபோலு—மொட்டிய
காட்சி திரியி னறந்திரியு மென்றுரைப்பர்
மாட்சியின் மிக்கவர் தாம்.

18. கெடுக்கப் படுவது தீக்கரும நாளுங்
கொடுக்கப் படுவ தருளே—யடுத்தடுத்
துண்ணப் படுவது நன்ஞான மெப்பொழுதும்
எண்ணப் படுவது வீடு.

19. திரையவித்து நீராட லாகா வுரைப்பார்
உரையவித் தொன்றுஞ்சொ லில்லை—அரைசராய்ச்
செய்துமா மென்னினு மாகா துளவரையாற்
செய்தவர்க்கே யாகுந் திரு.

20. உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினு
மிட்டுண்ணுக் காலது கூராதாம்—தொக்க
வுடம்பும் பொருளு முடையானோர் நன்மை
தொடங்காக்கா லென்ன பயன்.

21. இன்சொல் விளைநிலனா வீதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை யெருவட்டி
யன்புநீர் பாய்ச்சி யறக்கதி ரீனவோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

22. குற்றத்தை நன்றென்று கொண்டு குணமின்றிச்
செற்ற முதலா வுடையவரைத்—தெற்ற
வறிந்தாரென் றேத்து மவர்களைக் கண்டால்
துறந்தெழுவார் தூய்க்காட்சி யார்.

23. உணர்ச்சியச் சாக வுசாவண்டி யாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—யுணர்ந்ததனை
யூர்கின்ற பாக னுணர்வுடைய னாகுமேற்
பேர்கின்ற தாகும் பிறப்பு.

அறநெறிச்சாரம் முற்றிற்று. ஆகச் செய்யுள்—23.

## திரள்—X.

# திரிகடுகம்.

(சுருக்கம்.)

1. வாளைமீ னுள்ள றலைப்படலு மாளல்லான்
செல்வக் குடியுட் பிறத்தலும்—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற வருநூலு மிம்மூன்றும்
துஞ்சூமன் கண்ட கனா.

2. தன்குணங் குன்றாத் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தா ரேவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவு மிம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

3. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது.

4. வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—யெய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

5. உண்பொழுது நீராடி யுண்டலு மென்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலுந் தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை யிம்மூன்றும்
தூயம்யா மென்பார் தொழில்.

6. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்கா றிகந்தானு மிம்மூவர்
நின்ற புகழுடை யார்.

7. கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

8. மூந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர்.

9. தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றும்
செல்வ முடைக்கும் படை.

10. வைததனை யின்சொல்லாக் கொள்வானு நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானு—மூறிய
கைப்பதனைக் கட்டியென் றுண்பானு மிம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

11. கண்ணுக் கணிகலங் கண்ணோட்டங் காமுற்ற
பெண்ணுக் கணிகல நாணுடைமை—நண்ணும்
மறுமைக் கணிகலங் கல்வியிம் மூன்றுங்
குறியுடையார் கண்ணே யுள.

12. கிளைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கட் போற்றா னுழவும்—இளைஞனாய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையு மிம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

13. நன்றிப் பயன்றூக்கா நாணிலியுஞ் சான்றோர்முன்
னென்றிக் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த வடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்துவாழ் வார்.

14. நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மை யிலாள ரயலிருப்பு மிம்மூன்றும்
நன்மை பயத்த லில.

15. இல்லார்க் கொன்றீயு முடைமையு மிவ்வுலகில்
நில்லாமை யுள்ளு நெறிப்பாடு மெவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்றும்
நன்றறியு மாந்தர்க் குள.

16. காவோ டறக்குளந் தொட்டானு நாவினல்
வேதங் கரைகண்ட பார்ப்பானும்—தீதிகந்
தொல்வதுபாத் தூண்ணு மொருவனு மிம்மூவர்
செல்வ ரெனப்படு வார்.

17. நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை யல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு மஞ்சு மிம்மூன்றும்
திறவதிற் றீர்ந்த பொருள்.

18. வாய்நன் கமையாக் குளனும் வயிறூரத்
தாயமு தூண்ணாக் குழவியும்—சேய்மரபின்
கல்விமாண் பில்லாத மாந்தரு மிம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

19. ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை—யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லையிம் மூன்றும்
இருளுலகஞ் சேராத வாறு

20. கொண்டான் குறிப்பறிவா ணன்மனைவி கொண்டன
செய்வகை செய்வான் றவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வா னரச னிவர்மூவர்
பெய்யெனப் பெய்யு மழை.

1. ஐங்குரவ ராணை மறுத்தலு மார்வுற்ற
எஞ்சாத நட்பினுட் பொய்வழக்கும்—நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலு மிம்மூன்றும்
நற்புடையி லாளர் தொழில்.

திரிகடுகம் முற்றிற்று. ஆகச்செய்யுள்—21.

## திரள்—XI.

# நான்மணிக்கடிகை.

(சுருக்கம்.)

1. கள்ளி வயிற்றி னகில்பிறக்கும் மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

2. கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறுமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றாக் கெடும்.

3. கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்—என்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

4. பறை நன்று பண்ணமையா யாழினிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

5. இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னோடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

6. அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

7. கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்தருநற்
பானோக்கி வாழுங் குழவிகள்—வானத்
துளிநோக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

8. திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை யிலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

9. கரப்பவற்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவோர்—பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

10. பிறக்குங்காற் பேரெனவும் பேரா விறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரனைத்தும்—நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணாக் கெடும்.

11. போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லாம்—நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும் படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

12. நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலம் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

13. மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையும்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசிலா ரில்வழி யில்லை—யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

14. யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

15. கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மைய வாய்ச்சான்ற பொருளில்லை யீன்றாளின்
என்ன கடவுளு மில்.

16. நல்லார்க்குத் தம்மூரென் றூரில்லை நன்னெறிச்
செல்வார்க்குத் தம்மூரென் றூரில்லை—அல்லாக்
கடைகட்குந் தம்மூரென் றூரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

17. கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிய வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றங் கூற்றமே
இல்லிருந்து தீங்கொழுகு வாள்.

18. கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியாரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

19. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லா ரில்லகத் தூண்.

20. எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது—நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

21. மாசு படினு மணிதன்சீர் குன்றாவாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண்—மாசோடும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

22. எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேல்வர—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

23. வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியி லினிதெழூஉம்—வன்சொற்
கரவெழூஉங் கண்ணில் குழியி லிரவெழூஉம்
இன்மைக் குழியில் விரைந்து.

நான்மணிக்கடிகை முற்றிற்று. ஆகச் செய்யுள் — 23.

திரள்—XII.

# சிறுபஞ்சமூலம்.

(சுருக்கம்.)

1. பொருளுடையான் கண்ணதே போக மறனும்
அருளுடையான் கண்ணதே யாகு—மருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியு
முய்யான் பிறர்செவிக் குய்த்து.

2. படைதனக் கியானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகற்கும்
வாடாத வன்கண் வனப்பு.

3. கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு.

4. சிலம்பிக்குத் தன்சினை கூற்றநீள் கோடு
விலங்கிற்குக் கூற்ற மயிர்தான்—வலம்படா
மாவிற்குக் கூற்றமா ஞெண்டிற்குத் தன்பார்ப்பு
நாவிற்கு நன்றல் வசை.

5. நாணிலான் சால்பு நடையிலான் நன்ஞென்பும்
ஊணிலான் செய்யு முதாரதையும்—ஏணிலான்
சேவகமுஞ் செந்தமிழ் தேற்றான் கவிசெயலும்
நாவகமே நாடி னகை

6. பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வவவன்
[மின்
கருங்குணத்தார் கேண்மை கழிமின்—ஒருங்குணர்ந்து
தீச்சொல்லே காமின் வருங்காலன் றிண்ணிதே
வாய்ச்சொல்லே யன்று வழக்கு.

7. ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்ற முளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

8. மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

9. வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கு முலகு.

10. அழியாமை யெத்தவமும் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாத்தல்யார் மாட்டும்—ஒழியாமை
கன்றுசா வப்பால் கறவாமை செய்யற்க
மன்றுசார் வாக மனை.

11. பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு—தெற்றத்
தொழின்மகன் றன்னோடு மாறாயி னென்றும்
உழுமகற்குக் கேடென் றுரை.

12. பொன்பெறுங் கற்றான் பொருள்பெறு நற்கவி
என்பெறும் வாதி யிசைபெறும்—முன்பெறக்
கல்லார்கற் றாரினத்த ரல்லாஃ பெறுபவே
நல்லா ரினத்து நகை.

13. நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்
தொல்லை யுயிர்க்கூற்றுக் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட் கண்மாற்று மானத்தான்
ஆயி னழித லறிவு.

14. நன்புலத்துள் வையடக்கி நாளுநா ளோர்போற்றிப்
புன்புலத்தைச் செய்தெருப் போக்கியபின்—நன்புலத்த
பண்கலப்பை பாற்படுப் பானுழவோ னென்பவே
நுண்கலப்பை நூலோது வார்.

15. நீரற நன்று நிழனன்று தன்னில்லுள்
பாரற நன்றுபாத் துண்பானேல்—பேரற
நன்று தளிசாலை நாட்டல் பெரும்போகம்
ஒன்றுமாஞ் சால வுடன்.

16. குளந்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்
துளந்தொட் டுழுவய லாக்கி—வளந்தொட்டுப்
பாகு படுகிணற்றோ டென்றிவை பாற்படுத்தான்
ஏகுஞ் சுவர்க்க மினிது.

17. கற்புடைய பெண்ணமிழ்து கற்றடங்கி னானமிழ்து
நற்புடைய நாடமிழ்து நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிழ்து சேவகனும்
ஆகவே செய்யி னமிழ்து.

18. பிழைத்த பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல்—இழைத்த
பகைகெட வாழ்வது பல்பொருளாற் பல்லார்
நகைகெட வாழ்வது நன்று.

சிறுபஞ்சமூலம் முற்றிற்று. ஆகச் செய்யுள்—18.

திரள்—XIII.

# ஏலாதி.

(சுருக்கம்.)

1. இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பி—னடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்.

2. நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்—மறை
[யுடைமை
வேயன்ன தோளி யிவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும்.

3. செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீய்ந்துகலும்-வெங்கோல்
அமைச்சர் தொழிலு மறியலமோன் றுற்ற
எனைத்து மறியாமை யான்.

4. கண்போல்வார்க் காயாமை கற்று ரினஞ்சேர்தல்
பண்போற் கிளவியார்ப் பற்றுமை—பண்போலும்
சொல்லார்க் கருமறை சோராமை சிறிதெனினும்
இல்லார்க் கிடர்தீர்த்த னன்று.

5. கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொ
[ருண்மேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—பல்லார்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியார்க் கிறை.

6. குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமு நோக்கான்
மணநோக்கான் மங்கலமு நோக்கான்—கணநோக்கான்
கால்காப்பு நோக்கான் பெரியோர்நூல் காதலற்கு
வாய்காப்புக் கோடல் வனப்பு.

7. பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவி னிரப்பிவை தாழா—அணியின்
அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றும்
நிரம்புமேல் வீட்டு நெறி.

8. கூழுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னாயி னெறிநூல்கள்
பாடற்ற பன்னு மிடத்து.

9. இல்லிழந்தார் கண்ணிழந்தா ரீண்டியசெல்வமிழந்தார்
சொல்லிழந்தா ரானிரை தானிழந்தார்க்—கெல்லுழந்து
பண்ணியூ ணீய்ந்தவர் பல்யானை மன்னராய்
எண்ணியூ ணார்வா ரியைந்து.

10. கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கான்
முடம்பட்டார் மூத்தார்மூப் பில்லார்க்—குடம்பட்
டுடையரா யில்லுளூ ணீத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

11. இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு.

ஏலாதி முற்றிற்று. ஆகச் செய்யுள்—11.

திரள்—XIV.

# பட்டணத்துப்பிள்ளை பாடல்.

(சுருக்கம்.)

1. ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்
பாவியென்று நாமம் படையாதே—மேவியசீர்
வித்தாரமு மிடும்பும் வேண்டா மடநெஞ்சே
செத்தாரைப் போலத் திரி.

2. இருப்பதுபொய்போவதுமெய்யென்றெண்ணிநெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினை யுன்னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருப்ப நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்குந் தான்.

3. ஊருஞ்சதமல்ல வுற்றார்சதமல்ல வுற்றுப்பெற்ற
பேருஞ்சதமல்ல பெண்டிர்சதமல்ல பிள்ளைகளுஞ்
சீருஞ்சதமல்ல செல்வஞ்சதமல்ல தேசத்திலே
யாருஞ்சதமல்ல நின்றாள்சதங்கச்சி யேகம்பனே.

4. ஓயாமற்பொய்சொல்வர் நல்லோரைநிந்திப்ப ருற்றுப்பெற்ற, தாயாரைவைவர் சதியாயிரஞ்செய்வர் சாத்திரங்கள், ஆயார்பிறர்க்குப காரஞ்செய்யார்தம்மை யண்டினர்க்கொன், றீயாரிருந்தென்ன போயென்னகாண்கச்சி யேகம்பனே.

5. சொல்லால்வருங்குற்றஞ் சிந்தனையால்வருந் தோடஞ் செய்த, பொல்லாததீவினை பார்வையிற்பாவங்கள் புண்ணிய நூல், அல்லாதகேள்வியைக் கேட்டிடுந்தீங்குக ளாயவுமற், றெல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய்கச்சி யேகம்பனே.

6. ஓடாமற்பாழுக் குழையாமலோா முறைப்பவர்பாற், கூடாமனல்லவர் கூட்டம்விடாமல்வெங் கோபநெஞ்சில், நாடாமனன்மை வழுவாமலின்றைக்கு நாளைக்கென்று, தேடாமற்செல்வம் தருவாய்சிதம்பர தேசிகனே.

7. அத்தமும்வாழ்வு மகத்துமட்டேவிழி யம்பொழுக
மெத்தியமாதரும் வீதிமட்டேவிம்மி விம்மியிரு
கைத்தலைமேல்வைத் தழுமைந்தருஞ்சுடு காடுமட்டே
பற்றித்தொட்ரு மிருவினைப்புண்ணிய பாவமுமே.

8. ஒன்றென்றிருதெய்வ முண்டென்றிருவுயர் செல்வமெல்லாம், அன்றென்றிருபசித் தோர்முகம்பார்நல் லறமுநட்பும், நன்றென்றிருநடு நீங்காமலேநமக் கிட்டபடி, என்றென்றிரு மனமே யுனக்கோருப தேசமிதே.

9. நாட்டமென்றேயிரு சற்குருபாதத்தை நம்புபொம்ம, லாட்டமென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்தசந்தைக், கூட்டமென்றேயிரு சுற்றத்தைவாழ்வைக் குடம்கவிழ்நீர், ஓட்டமென்றேயிரு நெஞ்சேயுனக்குப தேசமிதே.

10. எரியெனக்கென்னும் புழுவோவெனக்கென்னு மிந்த மண்ணுஞ், சரியெனக்கென்னும் பருந்தோவெனக்கென்னுந் தான்புசிக்க, நரியெனக்கென்னும் புன்னாயெனக்கென்னுமிந் நாறுடலைப், பிரியமுடன்வளர்த் தேன்இதனாலென்ன பேறெனக்கே.

11. பேய்போற்றிரிந்து பிணம்போற்கிடந்திட்ட பிச்சையெல்லாம், நாய்போலருந்தி நரிபோலுழன்றுநன் மங்கையரைத், தாய்போற்கருதித் தமர்போலனைவர்க்குந் தாழ்மைசொல்லிச், சேய்போலிருப்பர்கண் டீருண்மைஞானந் தெளிந்தவரே.

பட்டணத்துப்பிள்ளை பாடல் முற்றிற்று. ஆகச் செய்யுள்—11.

## திரள்—XV.

# சகலகலாவல்லி மாலை.

1. வெண்டாமரைக்கன்றி நின்பதந்தாங்கவென் வெள்ளையுள்ளத், தண்டாமரைக்குத் தகாதுகொலோ சகமேழுமளித், துண்டானுறங்க வொழித்தான்பித்தாகவுண் டாக்கும் வண்ணங், கண்டான்சுவைகொள் கரும்பேசகல கலாவல்லியே.

2. நாடும்பொருட்சுவை சொற்சுவைதோய்தர நாற்கவியும், பாடும்பணியிற் பணித்தருள்வாய்பங்க யாசனத்திற், கூடும்பசும்பொற் கொடியேகனகக் குழையுமைம்பாற், காடும்சுமக்குங் கரும்பேசகல கலாவல்லியே.

3. அளிக்குஞ்செழுந்தமிழ்த் தெள்ளமுதார்ந்துன் னருட்கடலிற், குளிக்கும்படிக்கென்று கூடுங்கொலோவுளங் கொண்டுதெள்ளித், தெளிக்கும்பனுவற் புலவோர்கவிமழை சிந்தக்கண்டு, களிக்குங்கலாப மயிலேசகல கலாவல்லியே.

4. தூக்கும்பனுவற் றுறைதோய்ந்தகல்வியுஞ் சொற்சுவைதோய், வாக்கும்பெருகப் பணித்தருள்வாய்வட நூற்கடலுந், தேக்குஞ்செழுந்தமிழ்ச் செல்வமும்தொண்டர்செந் நாவினின்று, காக்குங்கருணைக் கடலேசகல கலாவல்லியே.

5. பஞ்சப்பிதந்தரு செய்யபொற்பாதபங் கேருகமென், னெஞ்சத்தடத்தல ராததென்னேநெடுந் தாட்கமலத், தஞ்சத் துவச முயர்த்தோன்செந்நாவு மகமும்வெள்ளைக், கஞ்சத்தவிசொத் திருந்தாய்சகல கலாவல்லியே.

6. பண்ணும்பரதமும் கல்வியுந்தீஞ்சொற் பனுவலும்யா, னெண்ணும்பொழுதெளி தெய்தநல்காயெழு தாமறையும், விண்ணும்புவியும் புனலுங்கனலும் வெங்காலுமன்பர், கண்ணுங்கருத்து நிறைந்தாய்சகல கலாவல்லியே.

7. பாட்டும்பொருளும் பொருளாற்பொருந்தும் பயனுமென்பாற், கூட்டும்படிநின் கடைக்கணல்காயுளங் கொண்டு தொண்டர், தீட்டுங்கலைத்தமிழ்த் தீம்பாலமுதந் தெளிக்கும் வண்ணங், காட்டும்வெள்ளோதிமப் பேடேசகல கலாவல்லியே.

8. சொல்விற்பனமு மவதானமுங்கல்விசொல்லவல்லர், நல்வித்தையுந்தந் தடிமைகொள்வாய்நளி னாசனஞ்சேர், செல்விக்கரிதென் றொருகாலமுஞ்சிதை யாமைநல்குங், கல்விப் பெருஞ்செல்வப் பேறேசகல கலாவல்லியே.

9. சொற்கும்பொருட்கு முயிராமெய்ஞ்ஞானத்தின் றோற்றமென்ன, நிற்கின்றநின்னை நினைப்பவர்யார்நிலந் தோய் புழைக்கை, நற்குஞ்சரத்தின் பிடியோடரசன்ன நாணநடை, கற்கும்பதாம்புயத் தாளேசகல கலாவல்லியே.

10. மண்கண்டவெண்குடைக்கீழாகமேற்பட்ட மன்னருமென், பண்கண்டளவிற் பணியச்செய்வாய்படைப் போன்முதலாம், விண்கண்டதெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்போற், கண்கண்டதெய்வ முளதோசகல கலாவல்லியே.

சகலகலாவல்லி மாலை முற்றிற்று. ஆகச் செய்யுள்—10.

## திரள்—XVI.

# உத்தம நீதி.

(சுருக்கம்.)

1. வயதினாற் பெரிய ரானோர் வான்றவம் பெரிய ரானோர், மயர்வகல் கல்வி கேள்வி மாட்சியிற் பெரிய ரானோர், வயதினாற் றவத்தாற் கல்வி மாட்சியாற் பெரிய னல்லாக், கயவனுஞ் செல்வ னில்லக் கடைத்தலைக் காத்து நிற்பார்.

2. வளமிலாச் சிற்றூர் வாழ்க்கை வன்மனக் கயவர் சேவை, உளமதிற் கிசையா வுண்டி ஒற்றுமை யில்லாப் பெண்டிர், இளமைசேர் விதவைப் பெண்கள் இகழ்நடை மூர்க்க மைந்தர், வளர்பெருந் தீயை யின்றி வாட்டியே யெரிப்ப வந்தோ.

3. உறவினர்க் கிடையே செல்வ முற்றிலார் வாழ்விற் கானின், மறமிகு புலிமா தங்க வன்றிரட் கிடையே சென்று, செறிமர நிழலிற் றங்கித் தீங்கனி நதிநீ ருண்டு, பெறுமர வுரியு டுத்துப் பிறங்குபுல் லுறங்க லின்பம்.

4. முயற்சியாற் கரும மெல்லா முடிந்திடு மெவர்க்குஞ் சால, முயற்சியை யின்றி யெண்ணின் முடிவதே தொன்று மின்று, முயற்சிசெய் துழலுஞ் சீய முரண்யானை தன்னை யுண்ணும், முயற்சியற் றுறங்கின் வாயின் முடுகிவீழ்ந் திடுமோ யானை.

5. ஈகைபோற் சிறந்த வைப்பு மெள்ளூறு முலோபம் போலச், சாகைசெய் பகையு மாண்பு சான்றநல் லொழுக்கம் போல, ஓகைசெய் யணியு முள்ளத் துவகைபோற் செல்வந் தானும், தோகையே யனையா யிந்தத் தொல்லுல கதனி லுண்டோ.

6. கற்றவர் கல்லா ரென்றுங் கைப்பொரு ளதனைச் சாலப், பெற்றவர் பெறாதா ரென்றும் பேரெழி லதனை வாய்த்தல், உற்றவ ருறாதா ரென்று மூவகைசா லிளைஞ ரென்றும், மற்றவ ரென்றும் பாரான் மறலிகைக் கொள்வ னந்தோ.

7. அற்பரா மனிதர் பல்லோ ரகமொரு மித்துச் சேர்ந் தார், பொற்புறக் காரி யங்கள் புரிந்திட வல்ல ராவர், அற்ப மாந் திரணஞ் சேர்ந்திங் காகிய கயிறு நன்கு, வெற்புநேர் யானை தன்னை விசித்திடக் காண்டு மன்றே.

8. புந்திசேர் மாந்த ரிந்தப் புவியிடை மூப்பி னோடும், வந் திடு மரண நீங்க வரவரம் பெற்றா லென்னச், சிந்தையிற் களிப்பி னோடுந் தேடுக கல்வி வித்தம், அந்தகன் வாயிற் பட்ட தாவியென் றறத்தைச் செய்க.

9. பொருளிலான் புவியிற் றுக்கி: புகன்றிடி னவனிற் றுக்கி, தெருளிலாக் கடனிற் பட்டோன்: செப்பிடி னிவனிற் றுக்கி, வெருளுறு தீரா நோயன்: விளம்பிடி னிவனிற் றுக்கி, இருளுறு மனத்துத் தீய வில்லவள் வாய்க்கப் பெற்றோன்.

10. இன்மையால் வருந்து வோர்பொன் னீட்டிடும் வழியை நாடி, நன்மைதேர் தந்தை தாயர் நன்மதி மனைவி மக்கள், தொன்மையாய் வாழ்ந்த நாடு துன்றிய கிளைஞ ரின்னும், பன் மையா மெவையும் விட்டுப் படர்குவர் நெடிய தூரம்.

உத்தம நீதி முற்றிற்று. ஆகச் செய்யுள்—10.

## திரள்—XVII.

# சூடாமணி நிகண்டு.

### 1. சிவனுடைய திருநாமங்கள்.

சங்கரனிறையோன்சம்பு சதாசிவன்பேயோடாடி
பொங்கரவணிந்தமூர்த்தி புராந்தகன்பூதநாதன்
கங்கைவேணியன்கங்காளன் கடுக்கையங்கண்ணிசூடி
மங்கையோர்பாகன்முன்னோன் மகேச்சுரன்வாமதேவன்.

நீலகண்டன்மாதேவ னிருமலன்குன்றவில்லி
சூலபாணியனீசானன் பசுபதிசுடலையாடி
காலகாலன்கபாலி யுருத்திரன்கைலையாளி
ஆலமர்கடவுணித்த னைம்முகன்பரசுபாணி.

அந்திவண்ணன்முக்கண்ண னழலாடிபாண்டரங்கன்
சந்திரசேகரனனந்தன் சடைமுடியநந்தனாதி
தந்தியீருரியோனம்பன் றற்பரனீறணிந்தோன்
நந்தியீச்சுரனேறூர்ந்தோ னக்கன்மாஞானமூர்த்தி.

வரன்மறைமுதலியீசன் மானிடமேந்திசோதி
பிரமன்மாற்கரியோன்றூணு பிஞ்ஞகன்பினாகபாணி
பரமனெண்டோளன்பர்க்கன் பவன்யோகிபகவானேகன்
அரனுமாபதிசிவன்பே ரறுபத்தாறநந்தமற்றும்.

### 2. விஷ்ணுவின் திருநாமங்கள்.

மாதவன்மாயன்செய்ய வாமனன்வாசுதேவன்
சீதரனந்தகோபன் றிருமகனுவணமேற்ற
கேதனன்பதுமநாபன் கேசவன்பஞ்சவர்க்குத்
தூதனேசார்ங்கபாணி சுரிமுகச்சங்கமேந்தி.

கொண்டல்வண்ணன்காகுத்தன் கோவிந்தனச்சுதன்மால்
விண்டுவேலையிற்றுயின்றோன் விரகினுலுந்திபூத்தோன்
வண்டுழாய்மவுலியாதி வராகன்வைகுண்டநாதன்
முண்டகாசனைகேள்வன்றா மோதரன்முராரிநேமி.

வலவன்றேவகிதன்மைந்தன் வனமாலிபடியிடந்தோன்
சலசலோசனனனந்த சயனன்பீதாம்பரன்பேர்
உலகளந்தருள்வோன்பஞ்சா யுதனுலகுண்டபெம்மான்
அலகைதன்முலையோடாவி யருந்தினோனாரசிங்கன்.

அரவணைச்செல்வன்கண்ண னறிதுயிலமர்ந்தமூர்த்தி
பிரமனைப்பெற்றதாதை பின்னைகேள்வன்முகுந்தன்
கரியவனெடியோன்காவற் கடவுணாரணனேழேழே
அரியின்பேராகுமற்று மபிதானமநந்தமாமே.

## 3. பிரமன் திருநாமங்கள்.

பிரமன்மேதினிபடைத்தோன் பிதாமகன்பிதாவிதாதா
வரனயன்மலரோனிந்த மண்பொதுத்தந்தைவேதா
இரணியகருப்பன்போத னினியமாலுந்திவந்தோன்
குரவனோதிமமுயர்த்த கொடியினனன்னவூர்தி.

இறைசதானந்தனீண்ட வெண்கணன்விதிசுயம்பு
மறையவனநந்தன்ஞானி மான்மகன்வாணிகேள்வன்
முறைதெரிபகவன்வானோர் முதுவனான்முகன்விரிஞ்சன்
நறைமலிகமலயோனி நாமமாறைந்துமாமே.

## 4. இந்திரன் பெயர்கள்.

மேகவாகனன்வேள்விக்கு வேந்தன்விண்முழுதுமாளி
பாகசாதனனேவச்சிர பாணிகோபதிசிறப்பாம்
நாகநீணகர்க்குநாத னொன்மருப்பியானையூர்தி
போகிவாசவனேவேந்தன் புரந்தரன்புலவன்சக்கிரன்.

மருதநன்னிலத்துவேந்தன் மருத்துவன்வானோர்கோமான்
புருகூதன்சசிமணாளன் புரோகிதன்கௌசிகனே
கரியவன்சுனாசீரனா கண்டலனுடன்வலாரி
அரிசதக்கிரதுநீண்ட வாயிரங்கண்ணனிந்திரன்.

## 5. விநாயகன் பெயர்கள்.

அங்குசபாசமேந்தி யம்பிகைதனயன்முன்னோன்
ஐங்கரன்மூத்தோனொற்றை யணிமருப்பினனேரம்பன்
கங்கைபெற்றோன்முக்கண்ணன் கணபதியீசன்மைந்தன்
வெங்கயமுகனேயாகு வாகனன்விநாயகன்பேர்.

## 6. மன்மதன் பெயர்கள்.

திருமகண்மைந்தன்மாரன் சித்தசன்சம்பராரி
உருவிலிமன்மதன்மீ னுறுகொடியுயர்த்ததோன்றல்
இரதிகாதலன்வசந்த னெழில்பெறுவேனிலாளி
கருதியகருப்புவில்லி கந்தர்ப்பன்மதன்பூவாளி.

திங்கள்வெண்குடையோன்றென்றற் றேரினன்வில்லிமோக
ஐங்கணைக்கிழவனெய்யு மலர்க்கணைவேளநங்கன் [ன்
செங்கண்மான்மைந்தன்மிக்க திறன்மனோபவன்மனோசன்
அங்கசன்மனோபுவேநீ ராழிவெம்முரசோன்காமன்.

## 7. எமன் பெயர்கள்.

சமன்செங்கோற்கடவுள்கூற்றுத் தருமனந்தகனேசண்டன்
நமன்வைவச்சுதனேமற்றை நடுவனேதென்றிசைக்கோன்
யமனரிமறலியேமற் றெருமையூர்தியுமாமிப்பாற்
கமையில்கான்மறன்மடங்கல் காலன்பாசத்தனும்பேர்.

## 8. பார்வதியின் பெயர்கள்.

அரனிடத்தவள்காமக்கோட் டத்தியம்பிகையேமாதா
தருமத்தின்செல்விதேவி சாம்பவிமலைமடந்தை
பரைசிவைகௌரிமுக்கட் பார்ப்பதியொடுபவானி
உரைகெழுசத்திநாரி யுமைபெயர்மூவைந்தாமே.

### 9. இலக்குமியின் பெயர்கள்.

மாக்கடற்பிறந்தகோதை மாவரிப்பிரியைசெய்யாள்
ஆக்கம்பொன்பொறிசீதேவி யலர்மகள்பொருளின்செல்வி
தாக்கணங்கிளையாள்பூமி னிலக்குமிசலசைசெல்வந்
தேக்குமிந்திரையீரெட்டுந் திருமகளுமமாமே.

### 10. கலைமகள் பெயர்கள்.

கலைமகள்பனுவலாட்டி காயத்திரிஞானமூர்த்தி
உலகமாதாபிராமி யொள்ளியவெள்ளைமெய்யாள்
இலகுவெண்சலசமுற்றாள் பாரதியிசைமடந்தை
மலரயன்மனைவிவாக்காள் வாணிநாமகள்பேராமே.

### 11. தேவர் பெயர்கள்.

அமரர்பண்ணவர்புத்தேளிர் கடவுளரண்டரும்பர்
இமையவர்விபுதர்வானோ ரிலேகரேபுலவர்விண்ணோர்
அமுதராதித்தர்மேலோ ரையரேசுரரேதீர்த்தர்
உமிழ்சுடர்மௌலிசூட்டு முயர்நிலத்தவருந்தேவர்.

ஈனமிலணங்குபுத்தே ளேற்றசூர்கடவுடேவே
ஆனதெய்வதமேதெய்வ மாமெனவுரைப்பர்நூலோர்.

### 12. அசுரர் பெயர்கள்.

தானவரவுணரோடு தைத்தியர்திதியின்மைந்தர்
ஏனையவசுரராகு நிசாசரரென்றுமேற்கும்
நிருதரேபிசிதவூணர் நிசாசரரரக்கர்தீமை
தருமிராக்கதர்பேர்சால கடங்கடர்தானுமாகும்.

### 13. ஆகாயத்தின் பெயர்கள்.

அண்டம்வானுலகுமங்கு லந்தரமம்பரங்கோ
குண்டலங்ககனங்காயங் குடிலம்புட்கரமநந்தம்
கண்டிடாவெளியேமீமா கத்தொடாசினிநபங்கம்
விண்டலம்விசும்புவேணி வியோமமாகாயமாமே.

## 14. காற்றின் பெயர்கள்.

வாதங்கால்வளிமருத்து வாடையேபவனம்வாயுக்
கூதிர்மாருதமால்கோதை கொண்டலேயுலவைகோடை
ஊதைவங்கூழ்சிறந்த வொலிசதாகதியுயிர்ப்புக்
காதரிகந்தவாகன் பிரபஞ்சனன்சலனன்காற்றே.

## 15. நெருப்பின் பெயர்கள்.

அரிவசுத்தகனனங்கி யனலயவாகனன்றீ
எரிசுசிசிகியேயார லியங்குகாற்றின்சகாயன்
கருநெறிகனலியேயங் காரகன்சித்திரபானு.

தழலுதாசனன்சிறந்த தனஞ்செயன்சாதவேதா
செழுமையமுளரிதென்கீழ்த் திசையிறைசேர்ந்தார்க்கொல்லி
எழுவிதநாவேவன்னி யேற்றபாவகனேதேயு
அழல்சுடர்ஞெகிழியின்ன நெருப்பின்பேராறைந்தாமே.

## 16. நீரின் பெயர்கள்.

வாரியாலங்கீலால மழையலர்கமலங்காண்டம்
நீரம்புட்கரமேசிந்து நெடும்புனல்சலிலம்பாணி
காரறல்புவனநாரங் கனவிரதங்கவந்தம்
மாரியம்புதமேயப்பு வருணஞ்சீவனம்வனம்வார்

பயமழையுதகந்தோயம் பயசுசம்பரம்பானீயம்
வயமொடுசீவனீயம் வருதீர்த்தங்கீரஞ்சீதம்
அயமளகத்தோடாம மமுதங்கஞ்சலநீராகும்
நயனுறுவருணனிந்த நற்புனல்வேந்தனாமம்.

## 17. சூரியன் பெயர்கள்.

பரிதிபாற்கரனாதித்தன் பனிப்பகைசுடர்பதங்கன்
இருள்வலிசவிதாச்சூர னெல்லுமார்த்தாண்டனென்றாழ்
அருணனாதவனேமித்தி ரனாயிரஞ்சோதியுள்ளோன்
தரணிசெங்கதிரோன்சண்டன் றபனனேயொளியேசான்றோன்.

அனலியேயரியேபானு வலரியேயண்டயோனி
கனலியேவிகர்த்தனன்வெங் கதிரவன்பகலோன்வெய்யோன்
தினகரன்பகலேசோதி திவாகரனரியமாவே
இனனுடனுதயன்ஞாயி றெல்லையேகிரணமாலி.

விரவுமேழ்பரியோன்வேந்தன் விருச்சிகன்விரோசனன்பேர்
இரவிவிண்மணியருக்க னேழேழுஞ்சூரியன்பேர்.

## 18. சந்திரன் பெயர்கள்.

நிலவுசோமன்களங்க னிசாபதிபிறைகுளிர்ந்த
கலையினனுடுவின்வேந்தன் கலாநிதியொடுகுபேரன்
அலவனேசசியேதிங்க ளம்புலிநிசாகரன்வான்
உலவிமகிரணன்சாந்த முற்றதண்ணவன்குரங்கி.

மதியிராக்கதிரேயிந்து மருவுதானவனேயல்லோன்
விதுவொடுகுமுதநண்பன் சுதாகரன்வேந்தனுலோன்
சிதைவிலாமுயலின்கூடு பசுங்கதிர்த்தேவென்றெல்லாம்
புதியசந்திரன்மூவேழு மெட்டுமேபுகன்றநாமம்.

## 19. மேகத்தின் பெயர்கள்.

பயனுறுமங்குல்சீதம் பயோதரந்தாராதாரம்
குயின்மழையெழிலிமஞ்சு கொண்டல்சீமூதங்கொண்மூ
வியன்முகில்விண்விசும்பு விளையுமால்சலதரஞ்செல்
புயல்கனங்கந்தரங்கார் போற்றுமைமாரிமேகம்.

## 20. முனிவர் பெயர்கள்.

துறவர்சார்பில்லோர்நீத்தோர்தூய்த்தவர்முனைவர்மெய்யர்
அறவர்மாதவர்கடிந்தோ ரந்தணரடிகளையர்
உறுவர்தாபதர்விளங்கு மிருடிகளுயர்ந்தோர்யோகர்
அறிஞர்பண்ணவர்சிறந்த வருந்தவர்முனிவராமே.

## 21. வேதியர் பெயர்கள்.

ஐயர்வேதியரேநூலோ ரறுதொழிலாளராய்ந்தோர்
மையில்பூசுரரேசெந்தீ வளர்ப்பவர்தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரேயாதி வருணர்முப்புரிநூன்மார்பர்
மெய்யர்விப்பிரரேவேத பாரகர்வேள்வியாளர்.

இருபிறப்பாளர்பார்ப்பா ரேற்றமேற்குலருயர்ந்தோர்
வருமறையவர்தம்பேராம் வன்னியேபிரமசாரி.

## 22. அரசர் பெயர்கள்.

புரவலன்பெருமானேந்தல் பூபாலன்வேந்தன்மன்னன்
நரபதிபொருநன்சக்கிரி நகைமுடிநிருபனோடு
குரிசில்பார்த்திவனேகோவே கொற்றவனிறைவனண்ணல்
அரசன்பேரிவையீரெட்டாந் தலைவன்காவலனுமாமே.

## 23. பகைவர் பெயர்கள்.

அரிகளேசெறுநர்சேரா ரமராருள்ளாரேநள்ளார்
மருவலர்தெவ்வர்மாணார் மாற்றலர்மன்னாரொன்னார்
தரியலரொட்டார்வட்கார் சார்பிலார்பற்றார்செற்றார்
பரரொடுகேளாரொல்லார் பகைவர்பேரெழுமூன்றாமே.

## 24. மகன் பெயர்கள்.

சந்ததிமதலைசூனுத் தனயன்காதலனேமெய்யன்
நந்தனன்சிறுவன்றோன்றல் குட்டனேநாட்டுஞ்செம்மல்
முந்தியமருமான்பிள்ளை முளைசுதன்புதல்வன்புத்திரன்
மைந்தன்கால்பொருள்சேயெச்சம் வழிபிறங்கடைமகன்பேர்.

## 25. உடலின் பெயர்கள்.

உடலுறுப்பங்கம்யாக்கை யுயிர்நிலைதேகங்காயம்
சடலமேமூர்த்தமெய்யே தாவரந்தனுவாதாரம்
கடமொடுபுதைபுணர்ப்புக் காத்திரம்பூட்சியாகம்
புடைகொள்பூதிகஞ்சரீரம் புற்கலமுடம்பின்பேரே.

## 26. சிங்கத்தின் பெயர்கள்.

அரிவயப்போத்துச்சிய மறுகுகேசரியேபூட்கை
மருவியமிருகாசன் வயமாவேமடங்கலோடு
பாவுகண்டீரவம்பஞ் சானனஞ்சிங்கப்பல்பேர்.

## 27. புலியின் பெயர்கள்.

வல்லியம்வயமாவோடு சித்திரகாயமற்றும்
வெல்லுமாவுழுவைபாய்மா வியாக்கிரந்தரக்குவேங்கை
கொல்லவேயெழுந்துசீறுங் குயவரிகொடுஞ்சார்த்தூலம்
புல்லொடுபுண்டரீகங் கொடுவரிபுலியினமம்.

## 28. யானையின் பெயர்கள்.

தும்பிமாதங்கந்தூங்க ஞேல்கறையடியெறும்பி
உம்பல்வாரணம்புழைக்கை யொருத்தல்வல்விலங்குநாகம்
கும்பிநால்வாயேபூட்கை குஞ்சரங்கரேணுவத்தி
கம்பவேழம்முவாவே கரிகயங்களிறுகைம்மா.

சிந்துரம்வயமாவேகஞ் செறியிபம்புகர்முகங்கள்
தந்தியேமதாவளந்தந் தாவளம்வழுவையாம்பல்
மந்தமாமருண்மாமற்றை மதகயம்போதகத்தோ
டுந்துமேழைந்துமேலு மிரண்டுமெற்றுயர்ந்தயானை.

## 29. குதிரையின் பெயர்கள்.

பரிதுரகஞ்சிறந்த பாடலங்கிள்ளைபாய்மாத்
துரகதம்வாசியுன்னி தூசிகந்தருவங்கற்கி
அரியயமிவுளிமாவே யச்சுவம்புரவிகோரம்
குரகதங்கோணங்கொக்குக் கொய்யுளைசடிலங்கோடை.

கந்துகங்கனவட்டம்போர் காட்டும்பத்திரிதுரங்கம்
குந்தமத்திரியாறைந்துங் குதிரையினமமாகும்.

## 30. குரங்கின் பெயர்கள்.

வலிமுகங்கடுவன்பாயும் வானரமரியேமந்தி
பிலவங்கங்கோகிலங்கான் பெயர்ந்தகோடரமேயூகம்
கலகமர்க்கடமேநாகங் கவிகுரங்கிவையீராறும்.

## 31. வண்டின் பெயர்கள்.

அரியளிஞிமிறுமந்தி யறுபதஞ்சிலீமுகஞ்சஞ்
சரிகமேசரகமேசஞ் சாளிகஞ்சுரும்புகீடம்
பிரமரமாவேகிதம் பிருங்கமேபிரசம்புள்ளு
வரிகொள்புண்டரீகந்தும்பி மதுபநாலைந்தும்வண்டாம்.

## 32. பறவையின் பெயர்கள்.

விகங்கமாசுகியேவீயே விகிரமேகுடிஞைபக்கி
சகுந்தம்பத்திரிபதங்கந் தாழ்பிணிமுகத்திஞெடு
பகர்ந்திடுங்ககமேகோலப் பறவையேபதசம்போகில்
புகழ்ந்திடுகுரீஇமூவைந்தும்புட்பொதுவயானமும்போ.

## 33. அரும்பு, பூக்களின் பெயர்கள்.

முகைகநனைகலிகைபோகின் முகுளமேமொக்குண்மொட்டு
மகிழ்வுறுகோரகங்கண் மற்றைச்சாலகமரும்பாம்
தகைபெறுகுசுமம்போது தாரலர்சுமனசந்தான்
மிகுமணமலரேதாமம் வீயிணர்துணர்பூவின்பேர்.

## 34. சோலையின் பெயர்கள்.

துடவைநந்தனவனம்பூந் தோட்டமேயரியுய்யானங்
கடிபொழிலுத்தியானங் காமரச்செறிவாராமம்
நெடியதண்டலையிஞெடு நீளுபவனமேசோலை
வடிவுடையூர்சூழ்சோலை வனமெனவைக்கலாமே.

### 35. காட்டின் பெயர்கள்.

அடவிகான்புறவம்பொச்சை யாரணியங்காந்தாரம்
கடம்வனமுளரிதில்லங் ககனங்கண்டகமேதாவம்
விடர்சுரம்பழுவங்கானல் விபினமேகட்சிகானம்
கடறுகானனமேயத்தங் களரிகாடிருபானாற்பேர்.

### 36. தாமரையின் பெயர்கள்.

புண்டரீகத்தினோடம் போருகங்குசேசயம்பூ
முண்டகமரவிந்தம்மே முளரிபங்கயம்வாரீசம்
இண்டையம்புயஞ்சரோச மெழிற்சதபத்திரிசூழ்ந்து
வண்டுளர்நளினங்கஞ்சம் வனசந்தாமரையினாமம்.

சலசமேகமலமற்றுஞ் சார்ந்தகோகனதத்தோடு
தலமுணுந்திருமாலுந்தி சரோருகம்பதுமமும்பேர்.

### 37. மலர்மாலையின் பெயர்கள்.

அலங்கலேபிணையலாரஞ் சிகழிகையணிசுருக்கை
இலம்பகந்தெரியல்சுக்கை யேற்றகத்திகையேதாமம்
துலங்கியபடலைகண்ணி தொடைதொங்கலொலியல்கோதை
மலர்ந்ததாரிவைமூவாறு மாலைமஞ்சரியுமப்பேர்.

### 38. மோட்சத்தின் பெயர்கள்.

கேடிலாவபவருக்கங் கேவலத்தோடுசித்தி
வீடுகைவல்லியம்மே மீளாதகதியேநூலோர்
பாடுநிர்வாணத்தோடு பரகதிசிவமேமுத்தி
நீடுமீரைந்துமோக்க மமுதமுநிகழ்த்தலாமே.

### 39. சுவர்க்கத்தின் பெயர்கள்.

உயர்நிலையுவணைபுத்தே ளுலகுபொன்னுலகுதானம்
வியனுலகந்துறக்க மேலுலகம்விமானம்
நயனுறுசுவர்க்கங்கற்ப நாகம்விண்ணுலகோடும்பர்
செயமுறுதேவலோகஞ் சிறந்திடுமீரேழ்பேரே.

## 40. உலகின் பெயர்கள்.

அவனிகாசினிசகத்தோ டகலிடமகிலம்பாரி
குவலயம்விபுலைமற்றைக் கோத்திரைகோவேகுவ்வே
புவனிமண்டலந்தலம்பூப் பொழில்வசுந்தரையுடன்பார்
பவனந்தாரணியினோடு படிபுவிதரணிவையம்.

தாலமேயசலைநேமி வசுமதிதரைதரித்திரி
ஞாலந்தாத்திரியளக்கர் நாடுபூதலங்கிடக்கை
பாலமேபூதிகங்கள் பார்த்திவம்பொறையனந்தை
வேலைசூழ்மகியாறேழு மேதினியுலகும்பூமி.

## 41. நாட்டின் பெயர்கள்.

பாடிமண்டலமேசும்மை பைதிரமுலகுதேயம்
நீடியவகலுளோணி நீவரங்கோட்டங்கண்டம்
பீடுறுசனபதங்கள் பெரும்பொழிலிவைபன்மூன்றும்
நாடுதண்ணடையுமாகு மழுவமுநாட்டுமப்பேர்.

## 42. மலையின் பெயர்கள்.

விலங்கலேபொறைவேதண்டம் விண்டுமாதிரமேவெற்புச்
சிலம்புகோத்திரமடுக்கல் சிலோச்சயஞ்சிமயம்பொங்கர்
நலங்கொள்குத்திரம்பறம்பு நகங்குறும்பொறையேநாகம்
இலங்கியவரையேபொச்சை யிறும்புகல்லகமேயோங்கல்.

பொருப்பொடுகுவடுகல்லுப் பொகுட்டோதிதிகிரிகுன்று
பருப்பதஞ்சைலஞ்சாரல் பாதவம்பதலைதாணுப்
பெருக்தபூதரமேசையம் பிறங்கலத்திரியேபீலி
உருத்திகழ்கிரிமலைப்பே ரொன்றுடனெண்ணைந்தென்ப.

## 43. கடலின் பெயர்கள்.

பரவைதெண்டிரையேசிந்து பௌவமேபாராவாரம்
நரலையார்கலியேயுந்தி நதிபதியம்புராசி
குரவைபேசக்கரங்கார் கோள்வேலாவலயமுந்நீர்
அரிமகராலயந்நீ ராழியம்பரமேவேலை.

வாரிதியளக்கர்நீண்ட வாரியேயுததியோதம்
வீரையன்னவமேயத்தி வெள்ளஞ்சாகரமேயாழி
சாருறுசலதியுப்புச் சலநிதிசமுத்திரஞ்சூழ்
வாரணமிவையாறுறு மறிகடலுவரியும்பேர்.

## 44. இடத்தின் பெயர்கள்.

இடையுழிவழிநிலம்பா லில்லுழையுளிகண்பக்கம்
புடைதலைமுதல்வளாகம் புலம்வலஞ்சூழல்பாங்கர்
கடைவாயின்பட்டிவைப்புக் கால்களந்தேயம்பாடே
இடமென்பமுன்பின்சார்வாய் கீழ்மேலுமதுவேயென்ப.

## 45. பொன்னின் பெயர்கள்.

மாசைபீதகமேபீத மாடையேமாடுவேங்கை
ஆசையேசுவணங்கார மருத்தங்காஞ்சனமேகாணம்
தேசிகங்கனகங்கைத்துச் செந்தாதுபொலமேயத்தம்
பேசியேசாமிவித்தம் பெருந்தனமுடலேபண்டம்.

இரணியநிதிவெறுக்கை யீகைகல்யாணமேமம்
பொருளுரைசந்திரஞ்சாம் பூனதம்பூரியீழம்
திரவியஞ்சாதரூபஞ் செங்கொல்லுநிதானமாழை
அரிதபனியமாறேழுஞ் செம்பொனாடகமுமாமே.

## 46. சோற்றின் பெயர்கள்.

அடிசில்போனகமேமூர லமலையேயயினிபொம்மல்
மடைமிசையுணாப்புழுக்கல் வல்சிபாளிதமேயன்னம்
தொடுபதமிதவைபாத்துத் துற்றுண்டிசொன்றிபுன்க
மொடுசெருவசனமூண்கூ ழோதனம்புகாவேசோறும்.

## 47. பெருமையின் பெயர்கள்.

பாடுமாண்பாழிமீளி பணைபொழில்பகடுமூரி
மோடுமாறடமேவீறு முடலைகொண்கருமையண்ணல்
ஈடுமாநனியேமான மிருமையேகயவோடேந்தல்
பீடுவான்குவவுசெம்மை பெருமைப்பேரிருபத்தேழே.

## 48. அழகின் பெயர்கள்.

எழில்வண்ணம்யாணர்மாமை யிராமமேர்நவ்விநோக்குச்
செழுமையேசேடுசெவ்வி சித்திரநலமேமாதர்
குழகொடுபொற்புநன்கு கோலமேமணிவனப்புப்
பழிபடாவிடங்கமாழை பத்திரந்தோட்டிபாங்கு.

சுந்தரமணங்குமஞ்சு சொக்குத்தேசிகமம்பொன்னே
சந்தங்காரிகைகவின்பூத் தளிமமேவாமங்காமர்
அந்தமேமயமேயொண்மை யாய்ந்தவாறேழுந்தானே.

## 49. வலியின் பெயர்கள்.

மிடல்வயந்திண்மைமைந்து மெய்ந்நலந்தீரமும்பல்
முடலைகொன்வாய்மைகூளி மூரியேயூக்கமீளி
அடல்விறலீடேயேணை யாண்மையேதிறலேநோன்மை
முடுகலேமல்லல்பாழி மொய்ம்புரன்முரணேதுப்பு.

தானமேமதமேதோற்றஞ் சத்துவந்தாவேயாற்றல்
மானமல்லுரமேமுன்பு மதுகையேயெறுழெண்ணைந்தும்.

## 50. அறிவின் பெயர்கள்.

மேதைஞாபகந்தெருட்சி மிகுமதியுணர்வுஞானம்
போதமேதெளிவுபுந்தி புலனுரனறிவின்பேராம்.

## 51. வெற்றியின் பெயர்கள்.

குறைவிலாவலனேவென்றி கொற்றமேவெற்றமுல்லை
விறல்சயம்வாகையாடு விசயம்பத்திவைவெற்றிப்பேர்.

## 52. செல்வத்தின் பெயர்கள்.

மறுவில்சீர்விபவமாடு வாழ்க்கையேவிருத்தியாக்கம்
பொறியிடந்திருப்பெருக்கம் போற்றியவெறுக்கைசெல்வம்.

## 53. அச்சத்தின் பெயர்கள்.

வெருவுசூர்பீர்வெறுப்பு வெறிவெடிகவலைபீதி
உருவுபேம்பிறப்புக்கொன்னே யுட்குநாம்பனிப்பணங்கு
தருபுலம்பதிர்ப்படுப்புத் தாம்பயமுருமச்சப்பேர்.

## 54. தரித்திரத்தின் பெயர்கள்.

குறையிலம்பாடுமிச்சை குறுவாழ்க்கைமிடிநிரப்புச்
சிறுமையேயொற்கமின்மை தீயநல்குரவேயல்கல்
வறுமையின்பெயர்பன்னொன்றும் வருதரித்திரமுமாகும்.

## 55. பகையின் பெயர்கள்.

மறலிகன்முனைமுரண்டா மடிதெவ்வோடரிபகைப்பேர்.

## 56. கோபத்தின் பெயர்கள்.

வெறுத்தலேசினங்குரோதம் வெகுளிமற்றரிப்புச்சீற்ற
செறித்திடுங்கலாங்கதங்கள் செயிரொன்பான்கோபத்தின்பேர்.

## 57. துன்பத்தின் பெயர்கள்.

அல்லலேயலக்கண்மம்ம ராந்தைகோட்டாலைபீழை
செல்லல்சேதங்கலக்கஞ் சிறுமைசூருறுகண்புன்கண்
சொல்லுமிட்டளமின்னாவே துனிபருவரலேதுக்கம்
ஒல்லுநோயமுங்கல்பீடை யுலமரலல்லகண்டம்.

கவ்வையாதனைபழங்கண் கையாறுநடலைபையுள்
எவ்வமேதம்வெறுப்பே யிடும்பையேயிடுக்கணின்னல்
வவ்வியபடர்பனித்தல் வறுமைவெய்துறலேபைதல்
வெவ்வியகவலைதீய விழுமமாறேழுந்துன்பம்.

## 58. ஆசையின் பெயர்கள்.

மாதர்நச்சிச்சையேடை வயாநம்புநசைநயப்புக்
காதல்வெப்பம்விருப்பங் காமமேயிராகம்பற்றே
ஆதரம்பெட்புவேட்கை யார்வமேமேவல்வெஃகல்
ஓதியவிழைவுமூவே ழும்ஆசையின்பேராமே.

## 59. நோயின் பெயர்கள்.

மாரியாமயமேபுன்கண் மடிநிழன்மடங்கல்பையுள்
சூர்பிணியுரோகங்குந்தஞ் சூழணங்கீராறுநோய்.

## 60. உவமைப்பொருட்சொற்கள்.

அன்னவேயனையசெத்தே யாங்கொப்பப்புரையப்போல
இன்னவேபொருவவெள்ள விகலவேகடுப்பமானச்
சொன்னகேழ்தகவுதூக்குத் துணையிணைநிகரநேர
மன்னும்வீழ்வுறழவற்றே மலைவெண்மூன்றுவமைப்பேரே.

## 61. விவாகத்தின் பெயர்கள்.

வதுவைகைப்பற்றலேதீ வலஞ்செய்தன்மணங்கல்யாணம்
விதியுளிவேட்டன்மன்றல் விவாகமெண்பேர்விளங்கும்
புதுவிழாமுருகுசாறு புத்தேளூற்சவமாஞ்சேறு
தலைமலர்கொண்டுபோற்றுந் துணங்கறலிரண்டுமப்பேர்.

## 62. உண்ணலின் பெயர்கள்.

அருந்திடறுய்த்தன்மாந்த லயிறலேயமுதுசெய்தல்
பொருந்தவேதாங்கைதொட்டல் புசித்தல்போசனமேயார்தல்
பரிந்தனர்நுகர்தறின்றல் பாரணமிசைதறுற்றல்
இருந்துணற்பேர்விழுங்க லிசைதருநொண்டலுங்கல்.

## 63. கொடுத்தலின் பெயர்கள்.

பரவுதானம்பகுத்தல் பொழிதலேயுதவனீட்டல்
விரவுபகாரம்வேள்வி விதரணங்களிகைவண்மை
அருளல்வேளாண்மையீகை யளித்தலேயுதாரம்வீசல்
தருதலினொடுதியாகங் கொடைகடப்பாடுஞ்சாற்றும்.

## 64. சாவின் பெயர்கள்.

துஞ்சலேவிடன்மாளல் சொற்றிடும்விளிவுவீவு
முஞ்சலேயுலத்தல்பொன்றன் முடிதலேதுவன்றன்மாய்தல்
எஞ்சியமரணம்வியோக மில்லெனல்கழிவிறத்தல்
அஞ்சியதபுதல்சாவி னபிதானம்பன்னேழாமே.

### 65. போரின் பெயர்கள்.

முரண்வினைசமரேயார்ப்பு மொய்தும்பைஞாட்புத்தாக்குச்
செருமறல்காளபங்கள் சினவலேயமர்பலைப்போ
டிரணமாகவநிகர்த்த விகலேவெஞ்சமமுடன்றல்
பொருதல்சங்கிராமந்தெவ்வுப் பூசலாயோதனம்போர்.

### 66. சொல்லின் பெயர்கள்.

மாற்றமேமொழியேகிரே வாணியேகதையெதிர்ப்புக்
கூற்றுரைபனுவல்செப்புக் குயில்வினைக்கிளவிகாதை
எற்றிடுநொடியியத்தோ டிசைபறைவாக்குப்பாணி
தோற்றமாறுவலினோடு மூவேழுஞ்சொல்லின்பேரே.

### 67. வாழ்த்தலின் பெயர்கள்.

பழிச்சலேத்துநுதித்தல் பரசுதல்பரவல்போற்றல்
வழுத்தலேருத்திரமேமெச்சல் வாழ்த்தலாந்துதியுமேற்கும்.

### 68. மெய்யின் பெயர்கள்.

சாதம்வாய்வாய்மையாணை சத்தியந்திடம்வேளாண்மை
நீதியாநிலைமையுண்மை நிச்சயஞ்சரதமெய்ப்பேர்.

### 69. பொய்யின் பெயர்கள்.

வாதையாமிச்சைதள்ளல் வலக்காரம்வழுதுபெட்டுச்
சாதனைமாயம்வஞ்சஞ் சடம்பிசிபடிறுபொய்ப்பேர்.

### 70. ஒலியின் பெயர்கள்.

அரவமேகளனேயோதை யாகுலமாரவாரம்
சுருதிகோடணைபுலம்பு தொனியியந்துழனியோசை
உரையிசையிடியேநாத முரைத்தகோசனையேபாட்டே
இரைசும்மைவகுணிமூவே ழிவைகளேயொலியினாமம்.

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1904.